
www.tamilarangam.net

# தேடல்

தேடல் 6

புரட்டாதி - ஐப்பசி 1990



இச் சஞ்சிகை கலை இலக்கிய மன்ற (கனடா) வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






முன் அட்டையில்:

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் துயரம்

மேலே: மௌன ஊர்வலம்.

www.tamilarangam.net



# தேடல்

# THEDAL

புரட்டாதி - ஐப்பசி 1990

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எங்கு செல்கிறோம்.............?

இலங்கைத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முற்றாக நசுக்கி விடுவதென்று ஸ்ரீ லங்கா அரசு காலக் கெடு விதித்து யுத்தத்தில் இறங்கியுள்ளது.தனது மூர்க்கத்தனமான இராணுவ நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.உணவு விநியோகத்தை நிறுத்தி பட்டினி போட்டாவது மக்களின் சுதந்திர உணர்வுகளை அழித்து விடலாம் என செயலாற்றுகிறது.சுய நிர்ணய உரிமை போராட்டத்தை ஒடுக்குகின்ற தனது நடவடிக்கைக்கு,இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல புலிகளுக்கு எதிரானது என்று வியாக்கியானம் சொல்லுகிறது. தனது திட்டத்தை செயல்படுத்த தமிழ் மக்களையும்,சர்வதேச அபிப்பிராயத்தையும் வென்றெடுக்க இலங்கை அரசு முயன்று வருகின்றது.

புலிகளின் ஏகபோக உணர்வும்,ஜனநாயக விரோத போக்குகளும் அரசின் திட்டத்திற்கு உதவியே செய்கின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் ஈடுபடும் சக்திகளுடன் புலிகள் ஐக்கியப்பட தவறுவதும்,ஜனநாயகத்தை வழங்க மறுப்பதும் போராட்டத்தை பின்தள்ளும் என்பதனை புலிகள் உணர்ந்தேயாக வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தையின் போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் அரசின் நிலைப்பாட்டை அம்பலப்படுத்தாதது புலிகளின் சந்தர்ப்பவாத போக்கையே காட்டுகிறது .மாகாண சபை கலைப்பிலும்,தேர்தல் நடாத்துவதிலும்,அரசியல் அமைப்பில் 6வது திருத்த சட்டத்தை நீக்குவதும் என்பதல்ல தமிழ் மக்களின் பிரச்சனை.மாறாக தமிழ் மக்களின் சுயநிர்ணய பற்றிய கோரிக்கைகளையே புலிகள் முன்வைத்திருக்க வேண்டும்.அரசியலில்

www.tamilarangam.net

புலிகள் பெரும் தவறு இழைத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 500 இற்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் ஆயுதக்குழுக்களினுல் காட்டுமிராண்டித்தனமாக கொல்லப்பட்டுள்ளனர். கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையேயான மோதலை ஏற்படுத்தி, வடக்கு கிழக்கு மாகாணத்தை பிரிக்க இலங்கை அரசு நெடுங்காலமாக முயன்று வருகின்றது. இதேவேளை, தமிழ் போராட்டக் குழுக்களும் முஸ்லிம் மக்கள் சம்பந்தமாக சரியான நிலைப்பாட்டை வைக்காதது தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் அன்னியப்படுத்தவே உதவியது. இந்தப் படுகொலையை யார் செய்தார்கள் என்பது கேள்வி. ஆனுல் இன்றைய சூழ்நிலையில் இக்கொலையை செய்வதற்கு இயலுமானவர்கள் இலங்கை அரசும், புலிகளுமே.

அராஜகத்திற்கு
மூளையே இல்லை
அதனுல்
மூலைக்கு மூலைக்கு
மக்கள் முணுமுணுப்பது
அதற்கு கேட்கவே இல்லை
ஆனுல்
ஒன்று மட்டும் உண்மை
விலங்குகளோடு வாழ
மக்கள் விரும்ப மாட்டார்கள்
புரிகிறதா.....?

ஆசிரியர் குழு

www.tamilarangam.net

# நான் தண்டனை கோருகிறேன்

பாப்லோ நெருடா
சிலீ நாட்டுக் கவிஞர்

நான்
அழுவதற்கு வரவில்லை அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான்......
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்......
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் பேராலே
கேட்கிறேன்....
தண்டனை அளியுங்கள்!

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிகப்பு இரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!

இந்த சவங்களின்மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!




www.tamilarangam.net

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!

நான்
எல்லோருடனும்
கைகுலுக்க விரும்பவில்லை
ரத்தக்கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான் தண்டனை கோருகிறேன்.....!

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதி வரும்வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.

இங்கேயே.....
இப்பொழுதே.......
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்...!



www.tamilarangam.net



# $ சர்வதேச நாணய நிதியம்

-ரதன்-

முப்பதின் பிற்பகுதிகளில் உலகில் வேற்று நாட்டு ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெறத் தொடங்கின. குறிப்பாக இரண்டாம் உலகப் போரின் பின் பெரும்பாலான நாடுகள் சுதந்திரம் பெற்றன. சுதந்திரத்தின் பின் ஒவ்வொருநாடும் தமக்கனவே தனியாக பொருளாதாரக் கொள்கையை வகுத்தன. ஒவ்வொருநாட்டிற்கும் தனித்தனியான நாணயங்கள் உருவாகின. இதனைத் தொடர்ந்து சர்வதேச வியாபார நோக்குடன் ஏனைய நாட்டின் நாணயங்களின் பெறுமதியை தமது நாட்டுடன் நிர்ணயிக்கத் தொடங்கின. இதனால் பல ஏற்றுமதி ஸ்தாபனங்கள் பாதிக்கத் தொடங்கின.

இதற்கிடையில் 1935ல் பொதுநலவாய நாடுகள் (Comanwelth countries) ஒட்டாவாவில் கூடி இது பற்றி ஆராய்ந்தன. மற்றுமொரு பக்கம் அமெரிக்காவும் இது பற்றி ஆராயத் தொடங்கியதுடன் பொருளாதாரக் கொள்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்தின.

1944ல் இங்கிலாந்தில் 44 நாடுகள் இது பற்றி கூடி ஆராய்ந்தன. இதை (Bretton Wood) மாநாடு என அழைப்பார்கள். இம் மாநாட்டில் குறிப்பாக நாணய பரிமாற்றம் பற்றியும், நாணய பெறுமதி நிர்ணயிப்பு பற்றியும் கலந்தாலோசித்தன. 1945ல் நிர்ணயிக்கப்பட்ட "சர்வதேச நாணய நிதியம்" Washington D.Cல; தனது தலைமை அலுவலகத்தை கொண்டுள்ளது. இதில் 149 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. குறிப்பாக முதலாம் உலக நாடுகள் கூடுதலாக (முதலாளித்துவ) அங்கத்துவம் பெற்றுள்ள சர்வ தேச நாணய நிதியத்தில் ஹங்கேரி, போலந்து ஆகிய கம்யூனிஸ நாடுகளும் அங்கத்துவம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அங்கத்துவ நாடும் அவ்வவ் நாட்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 25 த்தை தங்கமாக அல்லது அமெரிக்க டொலர்களாக கட்ட வேண்டும். மிகுதியை தமது நாட்டு நாணயமாக வழங்கலாம்.

ச.நா.நிதியத்தில் கூடுதலாக ஆதிக்கம் பெற்றுள்ள G,7 நாடுகள்அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், மேற்குஜேர்மனி, இத்தாலி, கனடா ஆஸ்ரேலியா) முதலில G.5என அழைக்கப்பட்டன. பின்னர் 1986ல் கூடிமடிலடி வில் கூடி இத்தாலி, கனடாவையும் தம்முடன் சேர்த்து G.7 ஆக மாறின.

www.tamilarangam.net

1946ல் $6.8 Billion முதலனத்துடன் இயங்கத்தொடங்கிய (இதில் $2/8 Billion அமெரிக்க ஐக்கிய நாடுகளால் வழங்கப்பட்டமை) சர்வதேச நாணய நிதியம் பின்வரும் நோக்கங்களை கொண்டுள்ளன.

1) நாணய கொடுப்பனவு பரிமாற்ற பிரச்சனைகளில் சர்வதேச ரீதியான ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் ஊக்குவித்தல்.

2) வேலை வாய்ப்பு, மெய்வருமானம், உற்பத்தி, அபிவிருத்தி என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக சர்வதேச வியாபாரத்தில் சமமான வளர்ச்சியை ஏற்படுத்தல்.

3) ஒழுங்கான பரிமாற்ற ஏற்பாட்டை ஊக்குவித்து நாணய பெறுமான தேய்வை தவிர்த்தல்.

4) சர்வதேச வியாபார வளர்ச்சிக்கு ஊறுவிளைவிக்கும் நாணய பரிமாற்ற தடைகளை நீக்கி, பலபக்க கொடுப்பனவு முறையை அபிவிருத்தி செய்தல்.

5) ஒரு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு செழிப்பை பாதிக்காத வகையில் கொடுப்பனவு சமமின்மையை சீர்படுத்துவதற்காக தற்காலிக நிதி உதவிகளை வழங்குதல்.

சர்வதேச நாணய நிதியம் கூடுதலாக மூன்றும் உலக நாடுகளுக்கு பண உதவி செய்வதன் மூலம் அந்நாடுகளில் ஒருவித மறைமுக ஆதிக்கத்தை செலுத்த முற்படுகிறது.

பொருட்களைச் செய்வதற்கான இயந்திரங்களை உற்பத்தி செய்வது மிகக் குறைவு. இது போன்ற நாடுகளுக்கு உதவி செய்வதன் மூலம் ச.நா.நி. வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கச் செய்கின்றது. சில உள்நாட்டு முதலாளிகள் வெளிநாட்டு முதலீடுகளை விரும்புகிறார்கள். இவர்கள் பொதுவாக அந்நாட்டு அரசாங்கத்தின் ஆதரவுடன் செயல்படுவார்கள்.

வளர்ந்து வரும் இந்த நாடுகளில் மனித உழைப்புக்கான ஊதியங்கள் மிகக் குறைவு. குறிப்பாக கனடாவில் ஒரு ஊழியருக்கு ஒரு மணித்தியலாத்திற்கு 10$ வழங்கப்படுமாயின், அதே ஒரு மணித்தியாலத்திற்கு இலங்கையில் வழங்கப்படும் ஊதியம் 40 கனடியசதங்கள் ஆகும். இதே போல் வளர்ந்து வரும் நாடுகளில், பொருட்கள் செய்வதற்கான மூலப் பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கக் கூடியதாக உள்ளது.

ச.நா.நி., வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் கடனாக வழங்கப்படும் டொலர்களை மீண்டும் டொலர்களாக பெறுகிறார்கள். வெளிநாட்டு முதலாளிகள் அங்கு உற்பத்தியாகும் பொருட்களை மீண்டும் வெளிநாடுகளுக்கு விற்று டொலர்களைச் சம்பாதிக்கிறார்கள்.

குறிப்பாக US$ ரூபாய் US$ என்ற தத்துவத்தை செயல் படுத்துவதில் கவனம் கொண்டுள்ளது. மூன்றும் உலக நாடுகள் குறிப்பாக உணவு, மூலப் பொருட்கள் என்பனவற்றையே கூடுதலாக உற்பத்தி செய்கின்றன. இவை இயந்திர

இவைக்கேதுவாக சர்வதேச நாணய நிதியம் அந் நாட்டு அரசாங்கங்களை ஊதியக்குறைப்பு, அரசாங்கத்தால் வழங்கப்படும் சேவைகளைக் குறைத்தல், நாணய பரிமாற்ற விகிதத்தை குறைத்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பனவற்றை செய்யும்படி தூண்டுகிறது. வளர்ந்து வரும் நாடுகள் தொடர்ந்து உதவி பெறும் நோக்குடன் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றன.

அதே சமயம் ச.நா.நி, ஒரு நாட்டில் ஏற்றுமதி குறைந்து இறக்குமதி கூடுவதையே விரும்புகின்றது. ஒரு நாடு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நாட்டிற்கு வரும் டொலர்களை, இறக்குமதி செய்வதன் மூலம் செலவளிக்கச் செய்கின்றது. இதேசமயம் இந்நாடுகள் ஏற்றுமதி செய்யும் மூலப் பொருட்களுக்கு உலகச் சந்தையில் ஓர் போட்டியை உண்டாக்குவதன் மூலம் இவற்றின் விற்பனையை குறைக்கிறது. இதனால் இந் நாடுகளின் பொருட்களை வாங்கும் வளர்ச்சி அடைந்த நாடுகள் குறைந்த விலையில் வாங்கக் கூடியதாக உள்ளது.

1980ல் சர்வதேச நாணய நிதியம் கூடுதலான பணத்தை அமெரிக காவிடம் இருந்து எதிர்பாத்தது. ஆனல் அமெரிக்காவோ தான் கூடுதலான பணம் தருவதாயின் கடன் பெறும் நாடுகள் அமெரிக்கா வகுக்கும் நாணய பரிமாற்ற நிபந்தனைகளை ஏற்க வேண்டும். எனவும் ஏற்காவிடின் தான் வழமையாக வழங்கும் பணத்தையும் தரமாட்டேன் என அச்சுறுத்தியது. 1986ல் மெக்சிக்கோ (Mexico)இ ஆர்ஜன்டினு (Argentina)இபிரேசில் (Brazil) ஆகிய நாடுகளின் மொத்த கடன் 200 Billion US$ ஆகும் குறிப்பாக மெக்ஸிக்கோ எண்ணெய் விலை ஏறும் என்ற நோக்கத்துடன் கூடுதலான கடன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எண்ணெய் விலை ஏற்ற இறக்கத்தையும் ஜு7ன் நாடுகளே நிர்ணயித்தன என்பது தவிர்க்க முடியாத ஓர் உண்மையாகும்.


1960ன் ஆரம்பங்களில் பிரான்ஸ, சர்வதேச நாணய நிதியத்தை கலக்க முற்பட்டது. அமெரிக்காவிடம் தமது டொலர்களுக்கு தகுந்தவாறு அல்லது சமமாக தங்கம் இல்லை என்பதே பிரான்சின் குற்றச்சாட்டு. அமெரிக்கா பொருளாதார நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களில் கூடுதலான டொலர்களை வெளி விடுவதன் மூலம் நெருக்கடிகளை தவிர்க்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க டொலர்களுக்கு வெளிநாட்டில் உள்ள செல்வாக்கே இதற்கு காரணம். பிரான்சின் இந்த முயற்சியை இங்கிலாந்து தனது தங்கத்தின் விலையை குறைத்ததின் மூலம் அமெரிக்கா வெற்றி கொண்டது. இதேபோல், 1980களில் யமெக்கா சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை ஏற்க மறுத்தது. இதன் விளைவாக யமெக்காவின் உற்பத்திப் பொருட்களை உலகச் சந்தையில் விற்க முடியாத நிலை யமெக்காவுக்கு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது .மூன்றும் உலக நாடுகள் அனைத்தும் முதலாளித்துவ நாடுகளுக்கு அடிமைப்பட்டுள்ளதற்கு சர்வதேச நாணய நிதியம் ஓர் சிறந்த உதாரணமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாள் தொடர்கிறது



இரவு மிக நீண்டு,
பாதியாய்த் தேய்ந்து
பனியுதிர்க்கும் பகலோடு
குளிர் படர்ந்து-

காற்றில் வெப்பம் நிறைக்கின்ற
அறைக்குள்ளே
இரவுகளில்,
இறகுக்கை போர்த்தி
உடல் கிடக்கும்.
இழுத்து இமைமூடக்
கூட்டுக்குள்ளிருந்து
ஆத்மா வெளிக்கிளம்பும்.

தாளிட்ட அறைக்கதவு,
சாளரங்கள்
தாண்டிப் பயனிக்கும்.

ஊர்போய்
உள்ள அவலங்கள்
பார்த்துத் துயரமுறும்,
திசையற்று நடுக்கடலில்
தவிப்புற்றும்,
வாழ்கின்ற மக்களிடை
வார்த்தையற்று அலைப்புண்ணும்.

திரும்பிவந்து
மூடிக்கிடக்கின்ற
இமைவிரித்துக் கண்களுக்குச்
சிவப்பெழுதும்.

www.tamilarangam.net

நெஞ்சில் நெருப்பெரியும்,
கொஞ்சமாய்
எஞ்சிக்கிடந்த
நிம்மதியும் சாம்பலாகும்.

இளவாலை விஜயேந்திரன்.

# கிடைக்கப் பெற்றோம்

காலம் (காலாண்டு இதழ்)
தொடர்புகளுக்கு;
Kalam
K.V.Moorthy
711 Kennedy Rd #209
Scarborugh,Ont
Canada

கதிர் (மாத இதழ்)
தொடர்புகளுக்கு
Kathir
c/o IPF
Fraenkel Ufer 22
1000 Berlin 36
West Germany


THE BROKEN PALMYRA
(வட இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பான முதல் நூல்)
தொடர்புகளுக்கு
Sri Lankans For Human Rights
P.O.Box 333,Station P
Toronto,Ont M5S 2S8
Canada
(புத்ததக விலை CAN $18.00)

ஓசை
தொடர்புகளுக்கு
OSAI
R.Rajagobal
5,Rue Hermel,
75018 Paris
FRANCE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சான்டினிஸ்டாக்களின் தோல்வி

எஸ்.வி.ராஜதுரை

"அமெரிக்காவினுடைய நிர்ப்பந்தகளிலிருந்து விடுபடுவதற்காக சான்டனிஸ்டா அரசாங்கம் பொருளாதாரத்துறையில் மேற்கொண்ட சமரச நடவடிக்கைகள் அரசியல் ரீதியான பெரும் இழப்பை ஏற்படுத்தின. இத்தகையதொரு பாதகமான சூழ்நிலையில் தேர்தலை நடத்த சான்டினிஸ்டா அரசாங்கம் முடிவு செய்தது விவேகமான செயல்தானா என்ற கேள்வி எழுகிறது. இந்த வேதனைமிக்க அனுபவங்களிலிருந்து உலகப் புரட்சியாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள்........ "

**அரசியல் அதிகாரம் புரட்சியாளர்களிடம் இருக்க முக்கிய உற்பத்திச் சாதனங்கள் எதிர்ப்புரட்சி வர்க்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்தன**

எஸ். வி. ராஜதுரை

நிக்கிராகுவாப் புரட்சியின் தனித்தன்மை பற்றிய மிகச் சிறந்த வாசகத்தைக் கூறியவர் சான்டனிஸ்டாத் தலைவர்களில் ஒருவரான ஒர்லாண்டோ நுனெஸ் (Orlando Nunez.) கிழக்குஐரோப்பியப் "புரட்சி" அலைகள் பெர்லின் சுவரைத் தரைமட்டமாக்கியதை யொட்டி சென்ற மார்கழி மாதம் அவர் கூறினார்; "எங்களைப் பொறுத்தவரை பெர்லின் சுவர் வீழ்ச்சி எந்த முக்கியத்துவமும் அற்றது. ஏனெனில் "சுவர்" ஒன்று இல்லாமல்தான் நிக்கிராகுவாப் புரட்சி பிறந்தது." ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பிறகு நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் சான்டினிஸ்டா தோல்வியடைந்தபோது அந்நாட்டின் தலைவர் டானியல் ஒர்டெகா (Daniel Ortega) கண்ணீர் மல்கக் கூறமுடிந்தது இதைத்தான். "நமது மனத்திற்கு இதம் தருகிற ஒரு நேர்மையான, தூய்மையான தேர்தலை உத்தரவாதம் செய்வதுதான் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் நிக்கிராகுவாப் புரட்சியாளர்களாகிய நாம், சான்டினிஸ்ட்களாகிய நாம், நிக்கிராகுவா மக்களுக்கு வழங்கக் கூடிய முதன்மையான பங்களிப்பாகும்."

நிக்கிராகுவாப் புரட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட தோல்வி, அந்த நாட்டுப் புரட்சிக்கு மட்டுமில்லாமல், லத்தீன் அமெரிக்க மற்றும் உலகெங்குமுள்ள புரட்சி இயக்கங்களுக்கு ஏற்பட்ட மாபெரும் பின்னடைவாகும். பத்தாண்டு கால அமெரிக்கப் பொருளாதார முற்றுகை;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் கைக்கூலியான கான்ராஸ் (Contras) என்ற எதிர்ப்புரட்சிப் படையின் இடைவிடாத காட்டுமிராண்டித்தனமான தாக்குதல், சோவியத் யூனியன் தனது பொருளாதார உதவிகளை நிறுத்தியமை; இவற்றின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவு; சாவையும் வறுமையையும் பற்றாக்குறையையும் தவிர வேறெதையும் அன்றாட வாழ்வில் காணமுடியாத மக்களிடையே ஏற்பட்ட விரக்தி இவற்றின் காரணமாகவே ஒரு மாற்று அரசாங்கத்தை மக்கள் விரும்பினார்கள் என்ற பொதுவான விளக்கம் இடதுசாரிகளால் தரப்பட்டு வருகிறது. ஆனால் இந்த விளக்கத்தில் ஓரளவே உண்மை இருக்கிறது.

உலகம் முழுவதிலுமிருந்து சென்ற 2500 பார்வையாளர்களின் கீழ் (ஐ.நா. வின் பிரதிநிதிகள், அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி காட்டர் ஆகியோர் இவர்களில் அடங்குவார்) நடந்த மாசித் தேர்தல், மேற்கு நாடுகள் உள்ளிட்ட எந்தவொரு நாட்டிலும் காண முடியாத மிக உயர்ந்த ஜனநாயகத் தன்மை வாய்ந்த தேர்தலாகும் என்பதில் ஐயமில்லை. சில மாதங்களுக்கு முன்னால் டானியல் ஒர்டெகாவை ஒரு குரங்கு என்று வர்ணித்த அமெரிக்க அதிபர் புஷ், நிக்கிராகுவாத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஜனநாயக உணர்வேடு ஒப்புக் கொண்ட ஒர்டெகாவுக்க பாரட்டுத் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசு அதிகாரத்தை தன் கையில் வைத்துக்கொண்டிருந்த சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி (F.S.L.N.) எந்தவொரு முதலாளித்துவ ஜனநாயக நாட்டிலும் இல்லாத தேர்தல் விதிகளை நடைமுறைப்படுத்தியது. அவற்றில் சில:

(1) தலைமைத் தேர்தல் குழுவிலிருந்து (Suprem Electoral Commission) எல்லாக் கட்சிகளும் தேர்தல் செலவுக்கான நிதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

(2) எந்தவொரு கட்சியும் வெளிநாடுகளிலிருந்து தேர்தல் நிதியை சட்ட ரீதியாகவே பெற்றுக் கொள்ளலாம் ஆனால் இவ்வாறு பெறப்படும் வெளிநாட்டுப் பணத்தில் 50% தலைமைத் தேர்தல் குழுவிடம் ஒப்படைக்கவேண்டும். இத்தொகை நியாயமான முறையில் குழுவால் கட்சிகளுக்கு விநியோகிக்கப்படும்.

(3) இந்தக் குழுவில் ஐந்து உறுப்பினர்கள் இருப்பர்; இருவர் சான்டினிஸ்டாக்கள், இருவர் எதிர்க்கட்சியினர், ஐந்தாவது உறுப்பினர் இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட "நல்லெண்ணம் கொண்டவர்".

(4) தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் எல்லாக் கட்சிகளுக்கும் சரிசமமான வாய்ப்பு; இது தவிர கட்டணம் செலுத்திக் கூடுதலான நேரத்தை வாங்கிக் கொள்ளலாம்.

இத்தகையதொரு ஜனநாயகத் தேர்தலில் தாங்கள் வெற்றிபெற்று விடுவோம் என்று சான்டினிஸ்டாத் தலைவர்கள் கருதினர். ஏனெனில் ஒர்டெகா போன்ற சான்டினிஸ்டாத் தலைவர்களின் தனிப்பட்ட செல்வாக்கு, நிகராக்குவா நாட்டிற்காக அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்த தியாகங்கள், அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு ஆகியன வெற்றியை ஈட்டித்தரும் என்று நினைத்தனர். ஆனால் ஒர்டெகா பெற்ற வாக்குக்கள் 41.5% மாவோயிஸ்டுகள் உள்ளிட்ட 14 கட்சிக் கூட்டணியான ஐக்கிய தேசிய எதிர்ப்பியக்கத்தின் (UNO) தலைவர் திருமதி. வயலெட்டா ஷமாரோ பெற்ற வாக்குகள் 54.8% மக்களின் தீர்ப்பை மதித்து அரசாங்க அதிகாரத்தைத் திருமதி ஷமாரோவிடம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிபந்தனையின்றி ஒப்படைப்பதாக கூறியுள்ளார் ஒர்டெகா. ஆனல் சான் டினிஸ்டாக் களின் கட்டுப்பாட்டிலுள்ள இராணுவம், குடிப்படை, காவல்துறை, நீதித்துறை முதலியனவற்றைக் கலைக்கவோ அல்லது மாற்றியமைக்கவே அவரும் பிறதலைவர்களும் ஒப்புக்கொள்வார்களா என்பது தெரியவில்லை. அமெரிக்காவின் ஆதரவைப் பெற்ற ஷமாரோ வெற்றிபெற்று விட்டதால் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை ஏகாதிபத்தியம் விலக்கிக் கொள்ளப் போகிறது.

தேர்தலில் சான்டனிஸ்டாக்களுக்கு ஏற்பட்ட தோல்விக்கான காரணங்களை ஆராய்வதும், மாசியில் தேர்தல் நடத்தியது விவேகமிக்க செயல்தான என்ற வேள்வியை எழுப்புவதும் உலகிலுள்ள புரசட்சியாளர்களின் தாக்குதளின் கடமையாகின்றன. அமெரிக்காவின் பொருளாதார முற்றுகையின் காரணமாகவும் கான்ட்ராஸ் எதிர்புரட்சி யாளரின் தாக்குதலின் காரணமாகவும் யாராலும் கட்டுப்படுத்த முடியாத பணவீக்கம் ஏற்பட்டது. சிறுர் மரண வீகிதம் பன்மடங்கு உயர்ந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்த ங்களிலிருந்து விடுபடுவதற்காக சான்டினிஸ்டாஅரசாங்கம் பல்வேறு வகையான விட்டுக் கொடுப்புகளைச் செய்தது. லத்தீன் அமெரிக்கப் புரட்சி இயக்கங்களுக்கு குறிப்பாக எல் சல்வடோரில் உள்ள FMLN என்ற அமைப்புக்குத்தான் வழங்கி வந்த ஆதரவுகளை நிறுத்தியது. அங்குள்ள அமெரிக்க அதரவுப் பிற்போக்காளரான கிறிஸ்டியானியின் அரசாங்கத்தை அங்கீகரித்தது. பணவீக்கத்தை கட்டுப் படுத்துவதற்காக அது மேற்கொண்ட நடவடிக்கைகள் பாட்டாளிகளின் வாழ்கைத்தரத்தை பாதித்தது. பொதுத் துறையிலிருந்த பல தொழில்களை அரசாங்கம் தனியார் துறைக்கு மாற்றியது. நிலப்பறிமுதல் கைவிடப்பட்டு "திறமை வாய்ந்த" நிலச் சீர்திருத்தத்தினுல் பயனடைந்த வந்த சிறு விவசாயிகளுக்கு இது ஆத்திர மூட்டியது. 1988இல் பறிமுதல் செய்யப்பட்ட தனியார் தொழிற்சாலைகள் அத்தொழிலதிபர்களிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட்டு, ஏற்றுமதியில் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை அவர்களே வைத்துக்கொள்ள அனுமதி தரப்பட்டது. தொழிலாளர்களின் ஊதிய உயர்வு நிறுத்தப் பட்டது.சான்டினிஸ்டா அரசாங்கம் தொடக்கம் முதல் கடைப்பிடித்து வந்த "கலப்பு பொருளாதாரக்" கொள்கையின் நீட்சியாகவே இந்த சலுகைகள் இருந்தன. விவசாயப் பொருட்களின் மற்றும் அவற்றைக் கொண்டு தயாரித்த பண்டங்களின் ஏற்றுமதி தனியார் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அவர்களுக்கு மான்யங்களும் வழங்கப்பட்டன.இந்த மான்யங் களைப் பயன் படுத்திக் கொண்ட ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதியின் மூலம் கிடைத்த டொலர் போன்ற அந்நியச் செலவாணியை வெளிநாட்டுக்கு அனுப்பினர். சொந்த நாட்டில் முதலீடு செய்யவில்லை. அதே நேரத்தில் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு நிதியுதவி செய்து வந்தனர். இவ்வாறு நாட்டின் மூலவளங்களை இவர்கள் உறிஞ்சிக் கொண்டதால் சிறு அளவிலான உற்பத்தித் திட்டங்களுக்கான நிதியொதுக்கீடு மிகவும் குறைக்கப்பட்டது. மாற்றுப் பொருளாதாரம் கட்டமைப்புகள் உருவாக வழியில்லாமல் போய்விட்டது. இது ஒரு முரண் நிறைந்த சூழலைத் தோற்றுவித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் அதிகாரம் புரட்சியாளர்களிடம் இருக்க, முக்கிய உற்பத்தி சாதனங்கள் எதிர்ப்புரட்சி வர்க்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. விட்டுக்கொடுக்கப் போவது யார் என்ற பிரச்சினை நீண்ட காலமாகவே நிலவி வந்தது.

சுரண்டும் வர்க்கங்களைப் பொறுத்தவரை அச்சுறுத்தல்கள், நிர்ப்பந்தங்கள், சலுகைகள் என வெவ்வேறு யுக்திகளைக் கையாண்டு வந்த சாண்டினிஸ்டா அரசாங்கம் கடந்த 5 ஆண்டுகளாக சலுகைகளுக்கே முதன்மை வழங்கத் தொடங்கியது. இத்தகைய கலப்பு பொதருளாதாரக் கொள்கையால் பொருளாதாரத்துக்கு மட்டுமில்லாமல் அரசியலுக்குமே பெரும் கேடு பயத்தது. நிக்கிரகுவா அரசாங்கத்திட மிருந்தும், C.I.A.விடமிருந்தும் மான்யங்கள் பெற்று வந்த முதலாளியக் கும்பல் இழந்துபோன தனது மேலாதிக்கத்தைத் திரும்பப் பெறுவதற்காக தாக்குதலைத் தொடுக்கத் தயராகி வந்தது. அமெரிக்காவின் பொருளாதார முற்றுகையை அகற்றுவதற்காக வெளிநாட்டு வங்கிகளுக்கும் அமெரிக்காவிற்கும் சான்டினிஸ்டா அரசாங்கம் வழங்கிய சலுகைகள் பலனளிக்க வில்லை.மாறாக சோமோச வாங்கிய கடன்களையும் சேர்த்துத் தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தரப்பட்டு வந்த ஊக்குவிப்பு கடந்த 5 ஆண்டுகளாக மெல்ல மெல்லக் கைவிடப்பட்டு தடையற்ற சந்தையை அரசாங்கமே ஊக்குவிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக தொழிலாளர்கள், நிர்வாக ஊழியர்கள் (White Collar Jobs), கிராமபப்புற, மற்றும் நகர்ப்புற ஏழைகள் ஆகியோரின் ஊதியவிகிதம் உயர்த்தப்படாமையால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். சுருக்கமாக சொல்லப் போனுல் உழைக்கும் மக்களின் கணிசமான ஆதரவை சான்டி னிஸ்டா அரசாங்கம் இழந்துவிட்டது.

அமெரிக்காவினுடைய நிர்ப்பந்தங்களிலிருந்து விடுபடுவதற்காக சான்டினிஸ்டா அரசாங்கம் பொருளாதாரத் துறையில் மேற்கொண்ட சமரச நடவடிக்கைகள் அரசியல் ரீதியான பெரும் இழப்பை ஏற்படுத்தின. இத்தகையதொரு பாதகமான சூழ்நிலையில் தேர்தலை நடத்த சான்டினிஸ்டா அரசாங்கம் முடிவு செய்தது விவேகமான செயல்தானு என்ற கேள்வி எழுகிறது. இந்த வேதனைமிக்க அனுபவங்களிலிருந்து உலகப் புரட்சியாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள்

1. புரட்சி அரசாங்கத்தின் நீண்ட கால சமூக பொருளாதாரக் கொள்கை புரட்சியின் ஆதரவு சக்திகளின் நலன்களுக்கு ஒத்திசைந்ததாக இருக்க வேண்டும். புரட்சிக்கு ஆரம்பத்தில் ஆதரவு காட்டிய பரந்துபட்ட மக்கள் என்றென்றும் அதே ஆதரவை வழங்கி வருவார்கள் என்று கருதி புரட்சிகரத் தலைவர்கள் தனிப்பட்ட முதலாளிகளையோ, சாவதேச வங்கிகளையோ அணைத்துக் கொள்ளமுடியாது.

2. உள்நாட்டில் உள்ள உழைக்கும் வர்க்கம், நேச வர்க்கங்கள் ஆகியவற்றின் நலன்களுக்கே முதன்மை தரவேண்டுமே அன்றி, வெளிநாடுகளில் உள்ள தாராளவாத, மற்றும் சமூக ஜனநாயகவாதிகளின் கோரிக்கைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் ஆலோசனைகளுக்குமல்ல.

3. அன்னிய நாடுகளின் நிதிகளைக்

www.tamilarangam.net

கொண்டு இயங்கும் அரசியல் கட்சி களுக்கு அனுமதி கொடுப்பதோ, வெளிநாடுகளிலிருந்து இயங்கும் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கும் அவர்களது உள்நாட்டு ஆதரவாளர்களுக்கு அனுமதி வழங்குவதோ,ஜனநாயகம் ஆகாது.புரட்சிகர சோசலிசப் புரட்சி பன்மைவாத ஜனநாயகத்திற்கு ஒரு வரம்பு உண்டு. வரம்பு மீறிய ஜனநாயகம், புரட்சி சக்திகளுக்கு அழிவை ஏற்படுத்தும்.

4. தொழிற்சாலைகளிலும்,பிற உற்பத்திசாலைகளிலும் வர்க்க அடிப்படையிலான ஜனநாயகம் தேவை. அப்போதுதான் உற்பத்தியும் விநியோகமும் உழைக்கும் மக்களின் கண்காணிப்பில் இருப்பதோடு புரட்சிகர அரசாங்கமும் உழைக்கும் மக்களின் கண்காணிப்பில் இருந்து வரும்.

5. உள்நாட்டுச் சந்தையை, இலக்காகக் கொண்ட சிறிய, மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு முதன்மை கொடுக்கப்படவேண்டுமே அன்றி பெரிய அளவிலான அதிகாரவர்க்க, மற்றும் தனியார் துறை ஏற்றுமதித் தொழிற் திட்டங்களுக்கு அல்ல.

6. சுதந்திரமான தேர்தல்களை நடத்துவதற்கு முன்பு வெளிநாடுகளிலிருந்து இயங்கும் ஆயுதம் ஏந்திய எதிரிகள்,அவர்களின் உள்நாட்டுக் கூட்டாளிகள் ஆகியோர் ஒழித்துக்கட்டப்பட்டு, புரட்சிகர அரசும்,ஆட்சியும் வலுப்படுத்தப்படவேண்டும்.

மாசித் தேர்தலில் ஓரட்டேகாதோல்வி அடைந்ததால் அரசு அதிகாரத்திற்கான வர்க்கப் போராட்டம் முடிந்துவிட்டது என்று நாம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. சமுதாயத்தின் முக்கிய சக்திகளாக உள்ள நகர்ப்புற,கிராமப்புற உழைக்கும் மக்கள், வெகுஜன அமைப்புகள், அரசு இயந்திரம்,குடிப்படை,நீதித்துறை, துறை ஆகியவற்றில் தம்பிடிப்பை இன்னும் தளர்த்தவில்லை. அளப்பரிய தியாகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இத்தகைய செல்வாக்கையும் வலிமையையும் அந்நாட்டின் புரட்சிவாதிகள் முற்றிலுமாக விட்டுக் கொடுத்து விடமாட்டார்கள் என்பது உறுதி. இதற்காக அவர்கள் பெர்லின் சுவர்களை எழுப்ப வேண்டியதில்லை. ஆனால் வர்க்கப் பகைவர்களுக்கெதிரான தடை சுவர்களைக் கட்டியே தீரவேண்டும். (Barricades)

இக் கட்டுரைக்கான ஆதாரங்கள்
1.Without a wall, Editorial in Econmic and poilitical weekly, March 3,1990
2.Nicaragua; Victory of 'Donna Violeta by summit Chakravarthy, Mainstream,March3,1990.
3.Electoral Defeat of Sandinistas by James Petras, Econmic and Political Weekly, March17, 1990.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு மனிதனின் நாட்குறிப்பில் இருந்து

- செழியன் -

குளிர் வீசியது. ஏற்கனவே பெய்த மழையில் இலைகளில் படர்ந்திருந்த மழைநீர் உதிர்ந்து விழுந்து அசௌகரியத்தை ஏற்படுத்தியது. நேரம் அதிகாலை இரண்டு மணியைக் கடந்திருக்கும். பனைவடலிக்குள் முட்புதர்களும், செடிகொடிகளும் நிறைந்த ஒரு மறைவில் நானும், பரதனும், புதிய நண்பரும் பதுங்கியிருந்தபடி குந்தியிருந்தோம். நிலம் சமதளமாய் இருக்கவில்லை. குந்தி இருப்பதுகூட சிரமமாய் இருந்தது. மழை காரணமாய் நிலமும் ஈரமாய்க் கிடந்தது.

அக்கம் பக்கங்களில் இருந்து பூச்சி, பூராண், தவளை என்று பல உயிரினங்களும் அடிக்கடி குரல் கொடுத்துக் கொண்டிருந்தன. சற்று
வித்தியாசமான ஒலி இருந்து இருந்து விட்டு எழும்பியது. பாம்பு சத்தம் போடுகிறது என்று புதிய நண்பர் தன் பங்குக்கு மிரட்டினார். பாம்பு சத்தம் போடுகிறது, கொட்டாவி விடுகிறது என்று இதுவரைக்கும் பலர் பல சந்தர்ப்பங்களில் கூறி இருக்கின்றனர். அப்போதெல்லாம் ஏற்படாத அச்சம் இப்போது ஏற்பட்டது. ஏற்கனவே எங்களை "அவர்கள்" தேடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு இந்தப் பற்றைக்குள் பதுங்கி இருக்கிறோம். இச் சந்தர்ப்பத்தில் பாம்பு கடித்தால் வைத்திய உதவிக்கு எப்படி? எங்கு போவது? பாம்பு கடித்து மரணித்துப் போவதைத் தவிர வேறு வழியேயில்லை என்றே நினைத்தேன்.

குந்தியிருந்து கால் உளைந்தது. கால்களை மாற்றி மாற்றி குந்தியிருந்தோம். அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போல் இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்காலப் பிரஜையின் பாடல்

மொஸாம்பிக் கவிஞர் ஜொஸிகரவெயின்



இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்
இங்கு பிறந்தது
நான் மட்டுமல்ல
நீ மட்டுமல்ல
நாம், சகோதரர்கள்......

தருவதற்கு கை நிறைய
அன்புண்டு என்னிடத்தில்
"நானுய்" நிறைந்த
அன்பைவிட ஏதுமில்லே.
என்னிடம் ஓர் இதயமும்
அழுகைகளும் உண்டு.
ஆனலும் அவை
என்னது மட்டுமல்ல......



இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்,
தருதற்கு நிறைய
அன்பினைத் தாங்கிய
நான்
இன்னும் மலராத் தேசமொன்றின்
பிரஜைகள் பலருள் ஒருவன்.

தமிழில் என்.சண்முகலிங்கன்
1 4 84
நன்றி:ஈழநாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"
பாரதியார்

# இடைவெளிக் கோட்பாடும் இப்பிரபஞ்சமும்

-கிரிதரன்-

நாம் வாழும்" இவ்வுலகில், இப்பிரபஞ்சத்தில் நாள் தோறும் நடைபெறும் மாற்றங்கள், அதற்கான காரணங்கள், உயிர்களின் தோற்ற வளர்ச்சியில் இவை பற்றியெல்லாம் விளக்குவதுதான் விஞ்ஞானம். விஞ்ஞானத்தை சந்தேகக் கண்ணுடன் பார்ப்பவர்கள் தான் அதிகம் தேவையற்ற ரீதியில் விஞ்ஞானத்தை சமயத்திற்கெதிரான ஒன்றாகக் கருதிக்கொண்டு செயற்படுவதால் தான் இந்நிலை. உண்மையில் விஞ்ஞானம் இயற்கையை விளக்கும் ஒரு முறையே. மனிதன் தன் அறிவின் வளர்ச்சியில் படிமுறைக்கேற்ப அறிந்து, உணர்ந்து, பரிசோதித்துக் கூறும் உண்மைகளே விஞ்ஞானத்தின் வளர்ச்சியாகவுமுள்ளது.

பௌதிகம் என்பது இப்பிரபஞ்சத்தைப் பற்றி, இவ்வுலகைப்பற்றி, பொருளின் அடிப்படைத் துகள்களின் உலகமான அணுக்களின் உலகைப்பற்றி, இங்கெல்லாம் நடைபெறும் இயக்கங்கள் பற்றிக் கூறும் விஞ்ஞானத்தின் ஒரு பிரிவாகும்.

பௌதிக வரலாற்றில், நீண்டகாலமாகவந்த அரிஸ்டாட்டிலின் கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வைத்தவர்கள் கலிலீயோ, குறிப்பாக சேர் ஐசாக் நியூட்டன் ஆகியோரே. இருபதாம் நூற்றுண்டுவரையில் பௌதிகத்தின் தூண்களாக கருதப்பட்டு வந்த நியூட்டனின் கோட்பாடுகளை ஆட்டங்காண வைத்தவர் அல்பேர்ட் ஐன்ஸ்டைன்.

அல்பேர்ட் ஐன்ஸ்டைன் என்றதும் ஞாபகத்திற்கு வந்தது புகழ்பெற்ற விஞ்ஞான சூத்திரமான பொருளிற்கும் சக்திக்கும் இடையிலுள்ள தொடர்பினை விளங்கப்படுத்தும் சூத்திரமான E=MC2 ஆகும்.

இன்றைய பௌதிகம் முழுக்க முழுக்க தங்கியிருக்கும் பிரதான தூண்களாக சார்பியற் கோட்பாட்டினையும் (Theory of lativity) இச் சக்திச் சொட்டுப் பௌதிகத்தினையும் (coiantomphysics) குறிப்பிடலாம். இதில் சார்பியற் கோட்பாடுகளின் மூலகர்த்தா அல்பேர்ட் ஐன்ஸ்டைனே. சக்திச் சொட்டுப் பௌதிகத்தின் ஆரம்ப கர்த்தாக்களின் ஒருவராகவும் ஐன்ஸ்டைனைக் குறிப்பிடலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நூற்றாண்டில் மிகப்புகழ் பெற்ற கோட்பாடாக இந்த சார்பியற் தத்துவத்தையே குறிப்பிடலாம். ஆரம்பத்தில் இக் கோட்பாட்டை ஐன்ஸ்டைன் விபரித்தபோது பலரிற்கு விளங்கவேயில்லை. "சுத்த அபத்தம் கேலிக்கூத்து" என்று ஒதுக்கித் தள்ளியவர்கள் பலபேர். அச்சமயம் டாக்டர் பட்டமே பெற்றிராத ஐன்ஸ்டைனின் கோட்பாடுகளைக் கிரகிக்கவே எத்தனையோ கலாநிதிப் பட்டங்களைப் பெற்ற பேராசிரியர்களாலேயே முடியாமலிருந்தது. ஆனால் இன்று......

ஐன்ஸ்டைனின் சார்பியற் கோட்பாடுகளில் பெரும்பாலானவை நிருபிக்கப்பட்டு, நியூட்டனின் கோட்பாடுகளைவிடத் தெளிவாக விளக்கக் கூடியதெதாரு கோட்பாடாக இந்த சார்பியற் கோட்பாடு வளர்ச்சியடைந்துள்ளது.

இக்கட்டுரையின் பிரதான நோக்கம் சார்பியற் தத்துவத்தின் பிரதான அடிப்படைக் கருதுகோள்களை சாதாரண வாசகர்க்கு அறிமுகப் படுத்துவதேயாகும்.

முதலாவதாக சார்பியற் தத்துவமென்றால் என்ன? சக்திச் சொட்டுப் பெளதிகமென்றால் என்ன? என்பது பற்றிப் பொதுவாகப் பார்ப்போம்.

நாம் வாழும் இப்பிரபஞ்சத்தில் நிகழும் இயக்கங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1.பொருட்கள் உருவான அடிப்படைத் துகள்களான, அணுஉலகில் நிகழும் இயக்கங்கள்.

2.சாதாரண மனிதனின் அறிவிற்குப் புலப்படக்கூடியதான இயக்கங்கள்.

3.அண்டரீதியில், பிரபஞ்சங்களிற்கிடையில்,ஒளிவேகத்தில் அல்லது பிரமாண்டமான வேகத்தில் நடைபெறும் மாற்றங்கள்.

இவற்றில் அணு உலகின் இயக்கங்கள் பற்றிய பெளதிகமே சக்திச் சொட்டுப் பெளதிகம். அண்டரீதியில் நடைபெறும் மாற்றங்களைப் புரியவைப்பதே சார்பியற் கோட்பாடாகும். இவ்விரு வகையான இயக்கங்களுமே சாதாரண மனிதனின் நடைமுறை அனுபவங்களால் விளங்கிக் கொள்ள முடியாத, அசாதாரணமான வையாகும். நியூட்டனின் கோட்பாடுகள் செய்ததெல்லாம் இவ்வுலகில், இப்பிரபஞ்சத்தில் நிகழும் இயக்கங்களை, மாற்றங்களை சாதாரண மனித அனுபவங்களிற்கு அமைவாகச்சிந்தித்து விளங்கப்படுத்தியதேயாகும்.இதனால்தான் நியூட்டனின் கோட்பாடுகளால் அசாதாரணமாக இயங்கும் பிரபஞ்சப் போக்குகளை விளங்கப்படுத்த முடியாமல் போயிற்று.

ஒரு வகையில் கூறப்போனால் சார்பியற் கோட்பாடுகளை "வெளி", "நேரம்", "பொருள்", "சக்தி" யிற்கிடையான தொடர்புகளை விளங்கப்படுத்தும் ஒரு கோட்பாடு என்றும் கூறலாம். ஐன்ஸ்டையினால் அறிமுகப்படுத்தப்பட்ட இக் கோட்பாட்டினை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1) சிறப்புச் சார்பியற் தத்துவம்
2) பொதுச் சார்பியற் தத்துவம்

ஐன்ஸ்டையினால் 1905ல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புச் சார்பியற் தத்துவம், இதுவரைகாலமும் நிலவிவந்த "வெளி" (Space) "நேரம்" பற்றிப் பல புரட்சிகரமான கோட்பாடுகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதன்முறையாக இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தியது. இவற்றை எப்படி எவ்வித பரிசோதனைகளு மற்றதொரு சூழலில் உய்த்துணர்ந்தார் என்பதில் தான் ஐன்ஸ்டைனின் மேதாவிலாசமே தங்கியுள்ளது.

1915ல் ஐன்ஸ்டையினுல் அறிமுகப்படுத்தப்பட்ட "பொதுச்சார்பியற் கோட்பாடோ" வெளி, நேரம், பொருள் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகளை விளங்கப்படுத்தியது. உண்மையில் "பொதுச்சார்பியற் கோட்பாடு", "சிறப்புச் சார்பியற் கோட்பாட்"டினை மேலும் விரிவாக விளங்கவைக்குமொரு கோட்பாடே.

### வெளியும் நேரமும்

"பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி ஆண்டுகள், எல்லாத்திசையிலுமோ எல்லையில்லா வெளி வானிலே என்று பாடினுன் பாரதி. இங்கு பாரதி "வெளி" என்று கருதுவது எதனை? பரந்து, விரிந்திருக்கும் வெளியில் அண்டங்கள் இருப்பதாக பாரதி கருதுகின்றுன். அதாவது பொருள், இருக்கக் கூடியதொரு ஊடகம் இந்த வெளி.... இதனைத்தான் சாதாரண நடைமுறை அனுபவங்களிலிருந்து எம்மாலும் ஊகிக்க, உணரமுடிகின்றது. இவ்விதம் தான் "வெளி"யைப் பற்றிய நியூட்டனின் கோட்பாடுகளும் இருந்தன. இவ்விதம் இந்த "வெளி"யானது நிலையான, தனித்த சுயாதீனமானதாக இருப்பதாக நியூட்டன் கருதினுர். ஆக சுயாதீனமான இந்த வெளியினை (absolute space) இவ் வெளியில் நிகழும் இயக்கங்கள் எதுவுமே பாதிப்பதில்லை. இவ்விதமான இயக்கங்கள், சலனங்களிற்கெல்லாம் அப்பாற்பட்டதாக, தனித்து, சுயாதீனமாக வியாபித்துக்கிடப்பது இந்த வெளி.

இது போல் தான் "நேரமும்" இருப்பதாக நியூட்டன் கருதினுர். நேரம் என்பதும் இலக்கங்களிற்கு அப்பாற்பட்டதாக, சுயாதீனமானதாக இயங்கும் ஒன்றாக இருப்பதாக, (absalute time) நியூட்டன் கருதினுர். "நேரம்", "வெளி" பற்றிய இத்தகைய எண்ணப் போக்குகள் நீண்டகாலமாகவே நிலவிவந்து கொண்டிருந்தன.

"சுயாதீனமான வெளி", "சுயாதீனமான நேரம்" என்னும் கோட்பாடுகளையெல்லாம் தகர்த்தெறிய வைத்தவை ஐன்ஸ்டைனின் இந்தத் சார்பியற் கோட்பாடுகள்.

உதாரணமாக புகைவண்டியில் விரையும் ஒருவனிற்கு, எதிரிலுள்ள கட்டடங்கள், மரங்கள் எதிர்த்திசையில் ஓடுவதுபோல் தோன்றும். சூரியனைச் சுற்றிவரும் பூமியில் உள்ள எமக்கு சூரியன் பூமியைச் சுற்றுவது போலிருக்கும். ஆக எல்லாமே பார்க்கும் ஒருவனின் இயக்கத்தில் தங்கியுள்ளது. பிரபஞ்சத்தில் நிகழும் இயக்கங்கள் யாவுமே ஒன்றையொன்று சார்ந்திருப்பவையே. இதுவரைகாலமும் இவ்வித இயக்கங்களிற்கு அப்பாற்பட்டு கருதப்பட்டு வந்த "வெளி", "நேரம்" கூட இவற்றை நோக்கும் பார்வையாளன் இயக்கத்திற்கும், நோக்கப்படும் பொருளின் இயக்கத்திலும் தங்கியுள்ள தொன்றுகும். அபத்தமாகத் தென்படுகின்றதா? ஆனுல் உண்மை அதுதான். நிரூபிக்கப்பட்ட உண்மை.

சாதாரண நடைமுறை மனித அனுபவங்களிற்கமைவாக நிகழும் இயக்கங்களில் இந்த மாற்றங்களை உணர்வது முடியாது. ஏனெனில் மாற்றங்கள் அவ்வளவு அற்பமானவை. எனவேதான் நியூட்னின் கோட்பாடுகள் சரிபோன்று தென்படுகின்றன. ஆனுல் மிகப்பிரமாண்டமான வேகத்தில் நிகழும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்களில் நிகழும் மாற்றங்கள் புறக்கணிக்க முடியாத அளவிற்கு பெரியவை. அத்தகைய சந்தர்ப்பங்களில் நியூட்டனின் கோட்பாடுகள் பயனற்றுப் போய்விடுகின்றன. கைகொடுப்பவை ஐன்ஸ்டைனின் சார்பியற் கோட்பாடுகளே.

உதாரணமாக இதுவரைகாலமும் சுயாதீனமாகக் கருதப்பட்ட "நேரம்" ஒளிவேகத்திற்கு அண்மையில் செல்லும் ஒரு ரொக்கட்டில் இருப்பவனிற்கு மாறுவது எவ்விதம்என்பதை சார்பியற் தத்துவம் கூறுகின்றது. பூமியில் உள்ள ஒருவனும், ஒளிவேகத்திற்கு அண்மையிலுள்ள வேகத்தில் செல்லும் ரொக்கட்டில் உள்ள ஒருவனும், ஒரேவிதமான கைக்கடிகாரங்களை கட்டியிருப்பதாகக் கருதிக் கொள்வோம். உண்மையில் "சுயாதீனமாகக்" கருதப்பட்ட நேரமானது ரொக்கட்டில் உள்ளவனைப் பொறுத்தவரையில் சில நிமிடங்களே சென்றிருக்கும். ஆனால் அதே சமயம் பூமியிலுள்ளவனைப் பொறுத்த வரையில் எத்தனையோ வருடங்கள் கழிந்துவிட்டிருக்கும். அபத்தமானதாக, நம்பமுடியாததாக, கேலிக்குரியதாக, முட்டாள்தனமாக இருக்கின்றதல்லவா. உண்மைகள் எப்பொழுதுமே ஆரம்பத்தில் இப்படித்தான் அபத்தமானவையாகத் தென்படுகின்றன. 1959ம் ஆண்டு, கார்வேட் பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் "நேரம்" மாறும் தன்மை நிருபிக்கப்பட்டது. இதற்காக அவர்கள் கடிகாரமாகப் பாவித்த கதிரியக்க இரும்பு அணுவின் கருவின் இயற்கையான அதிர்வுகளே. (the natural internal vibrationo of a nuclear of radioactive iron) இதற்காக அவர்கள் 22.5 மீற்றர் உயரமான கோபுரத்தைத் தெரிவு செய்தார்கள். உயரத்தாலும், அடியிலும் காமாக்கதிர்களை இரும்பு அணுக்கருக்களுடன் மோதவிட்டார்கள். சாதாரணமாக காமாக்கதிர்களை உறிஞ்சும் இரும்பு அணுக்கருக்களின் போக்கு, 22.5 மீற்றர் உயரத்தில் நேரம் வேகமாகச் செயற்படுகின்ற காரணத்தினல் வழமைக்கு மாறாகச் செயற்பட்டது.

"நேரம்" வேகத்துடன் மாறுபாடடைகிறது. 1905இல் வெளியிடப்பட்ட ஐன்ஸ்டைனின் "சிறப்புச் சார்பியற் தத்துவம்" இதனைக் கூறுகின்றது. 1917ல் வெளியிடப்பட்ட பொதுச் சார்பியற் கோட்பாடு "நேரம்" புவியீர்ப்புடன் மாறுபாடடைவதைக் கூறுகின்றது. புவியீர்ப்பு மிகவும் அதிகமான இடத்தில் நேரம் மிகமெதுவாகவே செல்கின்றது. இவ்விதம் கூறுகின்றது பொதுச் சார்பியற் கோட்பாடு.

அடுத்த "வெளி" வெளியென்று நாம் கருதும் இந்த வெறுமையான, வெளி (void) உண்மையில் "வெளிநேரம்"என்னும் நான்கு பரிமாணங்களால் ஆன பிரபஞ்சத்தின் நேரம் தவிர்ந்த மூன்று பரிமாணங்களுள்ள (நீள, அகல, உயரம்) பகுதிதான். நாம் வெளியையும் நேரத்தையும் தனித்தனியாகக் கருதுவதால் தான் ஐன்ஸ்டைனின் கோட்பாடுகள் பார்வைக்கு அபத்தமானவையாகத் தென்படுகின்றன. உண்மையில் "வெளிநேரம்" என்று ஒன்றாக கருதவேண்டும் என்பதுதான் ஐன்ஸ்டைனின் கொள்கை.

உண்மையில் நியூட்டன் பிரபஞ்சைத் பற்றிக் கருதுகையில், ஒரு குறிப்பிட்ட கணத்தில் வெளியில் கிரகங்கள், நட்சத்திரங்கள் இருப்பதாகக் கருதினர். ஆனல் ஐன்ஸ்டைனின் சார்பியற் கோட்பாட்டின் படி, இப்பிரபஞ்சம்

www.tamilarangam.net

"வெளிநேரத்தில்" நிகழும் சம்பவங்களின் (events) தொகுப்பே.

உதாரணமாக வெவ்வேறு ஒளியாண்டுத் தொலைவுகளில் உள்ள நட்சத்திரங்கள் இரண்டை அணு மேலுள்ள நேரத்திற்கும், வெளியிற்குமாக வரைபடத்தில் குறிக்கின்றன. (மேலுள்ளபடி ஒரு அச்சில் காட்டப்பட்டுள்ள வெளி உண்மையில் நீள, அகல, உயரம் ஆகிய மூன்று பரிமாணங்களுடன் கூடியது.)

சாதாரணமாக மூன்று பரிமாணங்களிற்குள்ளேயே சிந்தித்துப் பழக்கப்பட்டு இருப்பதால் தான் எமக்கு நான்கு பரிமாணங்களில் (வெளிநேர) இப்பிரபஞ்சத்தை உருவகித்து பார்ப்பது கஷ்டமாகவுள்ளது.

"நேரத்"தைப்போல் "வெளியும்" சுயாதீனமற்ற, இயக்கங்களிற்கேற்ப மாறுவது தானென்பதை சார்பியற்தத்துவக் கோட்பாடுகள் காட்டி நிற்கின்றன.

"வெளி" என்றால் வெறுமையானது என்று கருதும் எமக்கு, "வெளி"யைப் பொருளைப்போல் வளைக்கலாம்; அசைக்கலாமென்றால் நம்ப முடிகிறதா? கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாமலல்லவா இருக்கின்றது.

எத்தனையோ நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கிற்கப்பாலுள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலிருந்து ஒலி, ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைக் கேட்க, பார்க்கக் கூடியதாகயுள்ளது. வானினூடாக வரும் வானொலி அலைகளினூடாக இந்நிகழ்ச்சிகள் காவப்பட்டு வருவதையும் தான் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அதற்காக அதனை அபத்தம் என ஒதுக்கி விட முடிகின்றதா என்ன?

இதுபோல் தான் சார்பியற் கோட்பாடுகள் "வெளியும்" வளைக்கப் படக் கூடியதொன்றே எனக்கூறுவதும் அபத்தம் போல் தெரிந்தாலும் ஒதுக்கிவிட முடியாது. இவை பரிசோதனைகள் மூலம் நிருபிக்கப்படுகின்றன. உதாரணமாக புதனின், சூரியனைச் சுற்றி வரும் ஒழுக்கில் குறிப்பிடும் படியான மாற்றம் இருப்பது அவதானிக்கப்பட்டது. இதற்கான காரணத்தை நியூட்டன் விதிகள் மூலம் விளக்க முடியவில்லை. ஆனால் ஐன்ஸ்டைனின் "வெளி" வளையும் தன்மையானது என்பதற்கேற்ப, புதன் தன்னைச் சுற்றியுள்ள வெளியை வளைப்பதே அதன்ஒழுக்கில் காணப்படும் மாற்றித்திற்கான காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விதமான வெளி வளையும் தன்மை பிரிட்டனைச் சேர்ந்த வானியல் ஆராய்ச்சியாளரான சேர். ஆர்தர். எடிங்டனாலும் நிருபிக்கப்பட்டது. இதற்காக அவர் சூரியனிற்கு அருகாமையில் காணப்படும் நட்சத்திரங்களை அவதானித்தார். சூரியன் தன்னைச் சுற்றியுள்ள வெளியை வளைப்பதே, நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளி வளைந்து வருவதன் காரணமென்பதை அவர் நிலை நிறுத்தினார்.

இவ்விதமாக சார்பியற் கோட்பாடு இப்பிரஞ்சத்தைச் சரியாக பார்ப்பதற்கான வழிமுறைகளைக் கூறுகின்றது. நேரம், ஒருபொருளின் நீள, அகல, உயரங்கள், திணிவு முதலான இயல்புகளையெல்லாம் அவற்றை நோக்கும் பார்வையாளரின் இயக்கத்தில் சார்ந்துள்ளவையே. உதராணமாக நேரத்தைப்போல் ஒரு பொருளின் அளவும், பொருண்மையும் வேகத்துடன் மாறுபடக் கூயவையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதாரண நடைமுறைகளில் ஐந்தடி நீளமுள்ள ஒரு பலகையின் அளவு, ஒளிவேகத்திற்கண்மையில் செல்லும் ஒரு ரொக்கட்டிலும் ஐந்தடியாகத் தானிருக்குமென்பதில்லை. இதே போல்தான் பொருண்மையும், பொருண்மை வேகத்துடண் அதிகரிக்கின்றது; நீளமோ குறைகின்றது. இவையெல்லாம் ஐன்ஸ்டைனின் கணிதச்சூத்திரங்கள் மூலம் துல்லியமாக வெளிக்காட்டப்பட்டுள்ளன.

புவியீர்ப்பும் சார்பியற் கோட்பாடும்;

ஐன்ஸ்டைனின், பொதுச்சார்பியற் கோட்பாடானது புவியீர்ப்பு பற்றிய புதியதொரு கோட்பாட்டினை முன்வைக்கிறது. நியூட்டனின் கொள்கையின்படி, புவியீர்ப்பு என்பது பொருட்களிற்கிடையிலான கவர்ச சிவிசை, பிரபஞ்சத்தில் உதாரணமாக சூரியனையும், பூமியையும் எடுத்துப் பார்த்தால் இவற்றிற்கு இடையிலான கவர்ச்சி விசையே பூமியின் சூரியனைச் சுற்றிவருவதற்கான காரணம். இவ்விசை உதாரணமாக சூரியனுக்கும் பூமிக்குமிடையிலான தொலைவு எவ் வளவாக இருந்தாலும் அக்கணத்திலேயே தாக்குகின்றது இது நியூட்டனின் கருதுகோள். இது ஐன்ஸ்டைனிற்கு அதிருப்தியைத் தந்தது. ஏனெனில், ஐன்ஸ்டைனின் சார்பியற் தத்துவத்தின்படி இப்பிரபஞ்சத்தில் செக்கனிற்கு 186,000 மைல்கள் விரையும் ஒளியின் வேகமே அதிகூடியது. அதே சமயம் சுயாதீனமானது.

எனவே ஐன்ஸ்டைனின் புவியீர்ப்பு சம்பந்தமாக புதியதொரு கோட்பாட்டினை உருவாக்கினர். உண்மையில் ஐன்ஸ்டைனின் சார்பியற் கோட்பாடு களின்படி புவியீர்ப்பு என்பது ஒரு விசையேயல்ல;

மாறாக சூரியன் தன்னைச் சுற்றியுள்ள வெளியினை வளைத்துவிடுகின்றது; இவ் வளைவின் காரணமாகவே பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது. சூரியனின் இந்த தன்னைச் சுற்றிய வெளியினை வளைத்துவிடும் தன்மைதான் புவியீர்ப்பின் காரணமே தவிர, நியூட்டன் கூறுவது போல் கவர்ச்சி விசையல்ல என்பதுவே ஐன்ஸ்டைனின் நிலை.

இவ்விதமாக ஐன்ஸ்டைனின் சார்பியற் கோட்பாடானது வெளி, நேரம், புவியீர்ப்பு பற்றியதொரு கண்ணோட்டத்தினைத் தருகின்றது. நாம் வாழும் இப் பிரபஞ்சத்தின் தன்மைகளைப் புதியதொரு கண்ணோட்டத்தில் விளக்கி நிற்கின்றது. இதனை விளக்குவதற்கு, சாதாரண மனித அனுபவங்களிற்கும் மேலாக சம்பவங்கள் இப் பிரபஞ்சத்தில் நிகழ்வதால், சிறிது கூடுதலாக சூழ்நிலை மீறிச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்தால் புரியாது போலிருப்பவை யெல்லாம் இலகுவுவாகப் புரிவதைக் காணக் கூடியதாயிருக்கும்.

கெர்மன் மின்கோவ்ஸ்கி (Hermann Minkowski) கூறுவதைப்போல், சார்பியற் கோட்பாடு கூறும் பல விடயங்கள் இயற்கைக்கு மாறானவையாகத் தோற்றமளிப்பதன் காரணம் நாம் நேரத்தையும், வெளியையும் தனித்தனியாகக் கருதிச் செயற்படுவதுதான். மாறாக இப்பிரபஞ்சத்தை, இதன் நிகழ்வுகளை "வெளிநேர"ச் சட்டமாகக் கருதி (Spacetime frame) ஆராய்ந்தோமானால், "வெளிநேரம்" என்று நான்கு பரிமாணங்களை உள்ளடக்கியதாக இப்

(தொடர்ச்சி 43ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன்னால் முடியுமெனில்



உன்னால்
நீரின் அசைவுகளோடு
பேச முடியுமெனில்.

குற்றம் இன்றிச் சிரிக்கவும்
வெட்கம் இன்றி அழவும்
முட்களின் வலி இன்றி
முத்தம் இட்டுக் கொள்ளவும்
உன்னால்
முடியுமெனில்.

கதவுகளைத் திறந்து
காற்றினையும் படித்து
காவலதின் இழிமைகளைக்
கசப்பு என உணர்ந்து
கால்களுக்கு இறக்கைகட்டி
கடல்களையும், நிலங்களையும்
காலம் இன்றி உன்கால்கள்
கடக்க முடியுமெனில்.


நதிகளுக்குக் கீழிருக்கும்
நாட்களுக்கும் நாளங்கள்
நானென்று நீயுமெங்கு
நண்பனாக முடியுமெனில்.

இந்த உலகம்
எல்லா மொழிப்பாடல்களையும்
எமது மொழியில் பாடமுனையும்

கௌரி

www.tamilarangam.net

# தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லீம் மக்களும்



வ.ஐ.ச.ஜெயபாலன்

கொழும்பு மேலோரின் நலன்களுக்காகவும், இலங்கை முழுவதிலும் முஸ்லீம் மக்கள் பரந்து வாழ்கின்றனர் என்ற காரணத்திற்காகவும், தமது பாரம்பரியப் பிரதேசங்களைத் தொடர்ந்தும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அபிலாசைகளுக் குமாகத் தத்தம் செய்துதர அம்பாறை போன்ற முஸ்லீம் பாரம்பரியப் பிரதேசங்களில் வாழும் இளைய தலைமுறையினரும், மக்களும் தயாரில்லை என்பதை அண்மைக்கால முஸ்லீம் அரசியற் போக்குகள் துலாம்பரமாகக் காட்டிவருகின்றன. இது தொடர்பாக இளம் ஆராச்சியாளரும் யாழ்பாணப் பல்கலைக்களக விரிவுரையாளருமான எம்.வை.எம்.சித்திக் தனது புகழ்பெற்ற அம்பாறை மாவட்ட முஸ்லீம்களின் நிலப்பிரைச்சினைகளும், குடியேற்றப் பிரச்சினைகளும் என்ற கட்டுரையில் தெரிவிக்கும் கருத்துக்கள் மனம் கொள்ளத்தக்கனவாகும்.

தமிழ்பேசும் மானிலத்து முஸ்லீம் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பது குறித்தும், சிங்கள மாநிலத்தில் குறிப்பாக நிலப்பசிமிக்க ஈரவலயத்தில், தமது பாரம்பரியக் கிராமங்களிலும் நகரவட்டாரங்களிலும் வாழும் முஸ்லீம் மக்கள் அவற்றின் எல்லைகளை வரையறுத்து அரசினதும், அரசு ஆதரவுபெற்ற நிலப்பிரச்சனை மிகுந்த ஈரவலயச் சிங்களவர்களது ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக அவற்றைப் பாதுகாப்பது குறித்தும் அணி திரளவேண்டும் என்பதும்,இதனை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் தமது தலைமையைக் கட்டி எழுப்புதல் வேண்டும் என்பதும் இன்று காலத்தின் தேவையாகும்.

கிழக்கு மாகாணமும், தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும்,

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களது எதிர்காலம் பற்றிப் பார்த்தசாரதி ஒழுங்கு செய்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணியினரிடையே, ஒரு முஸ்லீமாவது இல்லை. தமிழ் போசும்

www.tamilarangam.net

மக்களது பாரம்பரியப் பிரதேசங்களான வடக்குக்கிழக்கு மாகாணங்கள்,தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் இந்த மாநிலத்தில் வாழும் முஸ்லீம் மக்களதும் பாரம்பரியப் பிரதேசமாகும்.

முஸ்லீம் மக்களேயும் உள்ளடக்கிய நிலேயில் மட்டுமே, கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் உரிமை கொண்டாடுவது சாத்தியமாகும். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த அம்பாறை, திருகோணமலே மாவட்ட பிரதேசங்களில் இதுவே உண்மை நிலேயாகும்.

ஒடுக்கும் எதிரிகளின் அறிஞர்கள் அறிந்து வைத்திருக்கும் ஒரு முக்கிய விடயம் தொடர்பாக, தமிழர் தலேமை அடிப்படைப் பிரக்ஞயே இல்லாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாயிற்று? கிழக்கு மாகாண முஸ்லீம் மக்களின் எதிர்காலம் தொடர்பாகமுன்னுள் மூதூார் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. அப்துல் முஜீத் பயனுள்ள பலகருத்துக்களேத் தெரிவித்துள்ளார். தமிழ் பேசும் மக்களது ஐக்கியமான எதிர்காலத்தில் ஆர்வமுள்ள யாவரும் இத்தகைய கருத்துக்களில் அக்கறை செலுத்துவது அவசியமாகும்.

உண்மையல் கிழக்கு மாகாணம், புத்தளம், மன்னுர் பிரதேசங்களில் வாழும் மூஸலிம் மக்களின் அபிலாசைகளேப் பிரதிபலிக்காத எந்த ஓர் இயக்கமும் தம்மை அனேத்துத் தமிழ் பேசும் மாநிலத்தின் மக்கள் இயக்கம் எனக்கூறிக் கொள்ளுதல் முடியாது.

எமது அரசியல் வரலாற்றினதும், சிந்தனேப் போக்கினதும் அடிப்படைத் தவறுகளுக்கு மூலகாரணமாக அமைவது, எமது யாழ்ப்பாண நோக்கு.

இந்தப் படுமோசமான, அக நிலேயை நோக்கினுல் (Subjective out look) நாம் நமது பிரதேசங்களேப் பற்றியும், அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பற்றியும் பல தவறுன கருத்துக்களுக்கு ஆளகியிருக்கின்ருேம். நமது போரட்டங்களும் இயக்கங்களும் யாழ்ப்பாணத்துக் குட்டிபூர்ஷவா வட்டங்களேயும், இளேஞர் மட்டங்களேயும் உடைத்துக்கொண்டு பரந்து படுவதற்குத் தடையாக அமைவதும், இந்த யாழ்ப்பாண நோக்கேயாகும். அடிப்படையில் தவறுன அரசியல் கையாளுகைக்கும், தோல்விகளுக்குமே இது வழிவகுக்கும்.

கிழக்கு மாகாணம் இலங்கைத் தமிழர்களது மாகாணம் என்ற எமது கருத்தும், இத்தகைய "யாழ்ப்பாண நோக்கில்" எழுந்த கருத்தே. உண்மை அது அல்ல; கிழக்கு மாகாணம் இலங்கைத் தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிரதேசம் எனபதே உண்மையாகும்.

திட்டமிட்ட அடிப்படையிலான சிங்களக் குடியேற்றம், சிங்கள மீனவர்களின் பருவகாலக் குடிவரவுகளேத் திட்டமிட்ட அடிப்படையில் நிரந்தரமாக்குதலும் விரிவாக்குதலும் போன்ற நடவடிக்கைகளால், (இந்த மீன்பிடியாளர்களில் பலர் காலப்போக்கில் சிங்களமயமாகிய, பரவர் போன்ற தென் இந்திய மீன்பிடிச் சாதிகளேச் சேர்ந்த தமிழர் களாவர். )நமது பாரம்பரிய பிரதேசமான கிழக்கு

www.tamilarangam.net

மாகாணம், நாளுக்குநாள் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இத்தகைய அவசரச் சூழலிலாவது நாம் கிழக்கு மாகணத்தின் நிதர்சனத்தை உணர்ந்து, அதன் அடிப்படையில் சிந்திக்கவும் அரசியல் நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்தவும் வேண்டுவது அவசியமாகம்.

அத்தகைய தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தால் இத்தகைய ஐக்கியம் ஒன்றினுல் மட்டுமே, அடிப்படையில் கிழக்கு மாகாணம் பாது காக்கப்படும். @

கிழக்கு மாகணத்தின் சனத்தொகை அமைப்பு 1981ம் ஆண்டின் புள்ளி விபரங்களின் அடிப்படையில், பின்வருமாறு அமைந்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் மொத்தக் குடிசனத்தொகையில் 17. 62வீதத்தையும், கிழக்கு மாகாணத்தின் குடித்தொகையில் 32. 28 வீதத்தையும் கொண்டுள்ள முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரிய மாவ்டமான அம்பாறை மாவிட்டத்தில் 41.6 வீத மக்களாக அமைந்து முதன்மை பெறுகின்றனர். இம் மாவட்டத்தில் தமிழர்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 20.1 வீதம் மட்டுமே.

கிழக்கு மாகணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே சனத்தொகை அடத்தி, தமிழரது தனிப்பெரும்பான்மை போன்ற விடயங்களிலாவது. யாழ்ப்பாணக் குடநாட்டுடன் ஓரளவு ஒப்பீட்டுத்தன்மை பெறுகின்றது.

(தொடரும்......)

| இனப்பிரிவு | சனத்தொகை | வீதாசாரம் |
|---|---|---|
| இலங்கைத்தமிழர் | 399,406 | 40.90 |
| மலையகத்திமிழர் | 12,045 | 1.24 |
| முஸ்லிம்மக்கள் | 315,201 | 32.28 |
| சிங்களவர் | 243,358 | 24.92 |
| ஏனையோர் | 6,465 | 0.66 |

தேடல் பற்றிய சகல தொடர்புகளுக்கும்

THEDAL
566 PARLIAMENT ST
TORONOTO, ONT
M4X 1P8
CANADA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரணத்திற்கு............

பா.அ.ஜயகரன்

இன்று காலை
அடையாளம் காணப்படாத சடலம்.
வீதியோரத்தில் நாய்....

மரணம் பற்றி கவலை கொண்டவர்களை
நினைத்து ஏளனந் திருந்தேன்.
ஆனால், இன்று
மரணம் பற்றிக் கவலை கொள்வது
நியாயமானது.
அடையாளம் காணப்படாத
அனாதரவான,நியாயமற்ற
மரணத்தை எப்படி ஏற்பது?
இக்கணம் இவ்விடத்தில் கொல்லப்படலாம்
என்னுடல் சிதைக்கப்படலாம்
நாறி நாய்க்கு உருசியாகலாம்
இதிலென்ன இருக்கிறது?
எல்லாம் என் விதியென
நினைந்து கொள்ள, அல்லது
நொந்து கொள்ள
என் சூழல்.



மரணம் பற்றி நான் அழுவதில்லை.
இன்று சிரித்துக் கொள்ள
எனக்குள் மரண அழுத்தம்.
என்னை விசரானாய்ப் பார்க்கும்
ஒரு சூழல்.

www.tamilarangam.net

இவர்கள் பற்றி நான் ஏன்
கவலை கொண்டேன்?
என்னைப் போல் ஆயிரமாயிரமாய்
பைத்தியங்களை உருவாக்கியவர்களை
எண்ணிச் சிரிப்பதில் என்ன தப்பு?


சடலத்தை நாடும் ஈயும்
மௌனமாய் நிற்கும் நானும்.
ஒரு துரோகி.........
அல்லது
ஒரு எதிரி.............
கொல்லப்பட்டதான வழமையான
கணிப்பில் சொல்லும் மக்கள்

நேற்று வீதிகளில் உலவியவர்கள்
புதியவர்கள் அறியாதவர்கள்.
ஆனால் இவர்கள் பழையவர்கள்
பழகியவர்கள்
உறவினர்கள், நண்பர்கள்.

கொலை மதுவில் மைந்தர்கள்
களிப்பில் துப்பாக்கி.
இனி என்ன இருக்கிறது.....?
இதில் யாரென்று இருக்கிறது?

ஆனால்
ஒன்று மட்டும்
எங்கள் மக்கள் இன்னமும்
வெளிச்சத்தில்தான் பார்க்கிறார்கள்
இருட்டில் அல்ல.

www.tamilarangam.net



# எல்லைகள் இடம் கொடுக்காதவிடத்து.......

~ சிபா. வசந்தன் ~



கொம்பியூட்டர் திரையில் விழுந்த அழகிய பச்சை எழுத்துக்கள் மங்கலாகத் தெரியும் அளவிற்கு உமாவின் கண்கள் களைத்துவிட்டன. கண்களைக் கைகளால் ஒருமுறை கசக்கிக் கொள்கிறாள். அலுவலகம் முடிந்து அனைவரும் சென்றுவிட, அந்த ஒரு நிமிட நேரத்தினிமையை அனுபவித்துக் கொண்டிருந்த அவளை வழமையான அனுதாபத்துடன் பார்த்தேன். கையை மேலே உயர்த்தி ஒருமுறை சோம்பல் முறித்துவிட்டுத் தன் கணவனுடன் முரண்படப்போகும் இன்னுமொரு இரவுக்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறாள்.

"இந்தக் கொம்பியூட்டர் மேல எனக்குச் சரியான பொறாமை......"
"ஏன் உமா அப்பிடிச் சொல்லுறீர்...."
"ஏனெண்டா பின்நேரத்தில இருந்து அடுத்தநாள் காலமை வரையிலாயாவது நிம்மதியா ஓய்வெடுக்க முடியுதே....... அதலாதான்."

ஆரம்பத்தில் அவளுடைய வார்த்தைகளின் அர்த்தங்களை உடனுக்குடன் விளங்கிக் கொள்ளுமளவிற்கு நான் பக்குவப்படவனாக இருக்கவில்லை. மேலும் சொல்லப்போனால் அவளுடன் பழகும்வரை பெண்களையோ பெண்களின் பிரச்சனைகளையோ பற்றி நான்

அதிகம் அறிந்திருக்கவில்லை ஏனென்றால் நானும் எமது ஆணாதிக்க சமுதாயத்தின் ஒரு சுத்தமான வழித்தோன்றலே.

"மச்சான் மணியான தமிழ்சரக்கொண்டு எங்கட Officey லை சேர்ந்திருக்கு.. ஆனால் அனியாயமாய் கலியாணம் கட்டித் துலைச்சுவிட்டுது..."

உமா எமது அலுவலகத்தில் சேர்ந்த ஆரம்ப நாட்களில், அவளைப்பற்றி எமது நண்பர்களுடன் இப்படித்தான் பேசிக்கொண்டேன். நான் ஏதோ பெரிய சமூக சிந்தனைகொண்டவனாகவோ அல்லது சமூகத்திற்காக என்னையே அர்பணித்துக் கொள்ளக் கூடியவனாகவோ என்றுமே இருந்ததில்லை. எமது சமூகத்தின் பிரச்சனைகள் பற்றியும் எதையுமே அறிந்திருக்கவும் இல்லை. உயர்தர வகுப்புவரை பல்கலைக்கழகம் செல்லும் பிரச்சனையும், அதற்கு இடம் கிடைக்காததால் ICMA செய்யும் பிரச்சனையும், அதன் பின் நாட்டுப்பிரச்சனை தொடங்க, வெளிநாடு செல்லும் பிரச்சனையும் என ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒவ்வொரு பிரச்சனைகள் என்னை முழுமையாக ஆட்கொண்டுவிட்டன. வெளிநாடு வந்தும் கூட என் பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. வெளிநாடுகளிலும் அடிப்படைத் தேவைகள் என நாமே உருவாக்கிவைத்திருக்கும் சில அர்த்தமற்ற அபிலாசைகளினால் வீடு, கார், ரேடியோ, T.V என்பன தவணைமுறைகளில் வாங்கி, இன்று உடம்பையே உருக்கும் நோய்வந்தாலும் ஒரு நாள் கூட வேலைக்கு ஓய்வெடுக்க முடியாமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன். என்றாலும் நான் இன்னும் சளைக்கவில்லை. கஷ்டங்களைத் தீர்க்க முடியாததால், கஷ்டங்களுடன் வாழ நான் என்னைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டேன்.

என்றாலும் உமாவின் கஷ்டங்கள் பிரச்சனைகள் என்னை மிகவும் நொந்து போகச் செய்தன. சமூகத்தில் பாதக்கப்பட்டவர்களைப் பற்றி சிறிதும் கவலைப்படாது அவர்களுடைய தலைகள் என் கால்களில் மிதிபட, என் தனிப்பட்ட ஒருவனது கல்வி, பொருளாதாரத் தின்னிறைவு என்ற இலக்கை நோக்கி அசுரவேகத்தில் முன்னேறிக்கொண்டிருந்த என் கால்களை, உமாவின் கலங்கிய கண்களும், நொய்ந்துபோன இதயமும் சிறிது இடறிவிட்டன. நின்று, நிதானித்து நான் கடந்து வந்த பாதையைச் சற்று திரும்பிப் பார்த்தேன்..

ஓ...பறிக்கப்பட்ட மலர்களும்.... முறிக்கப்பட்ட தென்றலுமாகப் பாதை அசிங்கப்பட்டுக்கிடந்தது.

தெரிந்தோ, தெரியாமலோ, விரும்பியோ, விரும்பாமலோ இவளைப்போன்ற ஆயிரம் உமாக்கள் எமது சமூகத்தில் உருவாகுவதற்கு நானும் காரணமாக இருந்திருக்கின்றேன். நான் நேரடியாக எந்தக் குற்றமும் செய்யவில்லைத்தான் என்றாலும் சமூகத்தைப்பற்றிய அறிவின்மையால் நான் அதை அழியவிட்டிருக்கின்றேன்.

"சுகந்தன் உங்களுக்கு Girlfriend யாராவது இருக்கினமே..."

"சீ என்னைப்பார்த்தால் அப்படியான ஆள் மாதிரியே தெரியுதுல எனக்கு ஒருதரும் அப்படியில்லை..." நான் அவசரப்பட்டுக் கூறி எனது நல்ல பிள்ளைத்தனத்தைக் காட்டிக் கொண்டேன்.

"அதுக்கு ஏன் இப்படிப் பயந்து சாகிறீர்.. . காதலிக்கிறது என்ன கிறிமினல் குற்றமே. .நீர் ஆள் விசயகாரன் போலத் தெரியுது. காதலிச்சால் பேந்து கலியாணம் கட்டும்போது காசு கேட்க ஏலாது என்று நல்ல பிள்ளைமாதிரி இருக்கிறீர்போல இருக்கு"

உமா ஒரு நாள் கூறியது என்னை மிகவும் உறுத்தியது. அவள் என்னுடன் சரியாக அறிமுகமாகுமுன்பே இப்படி என்னை வம்புக்கு இழுப்பது போலக் கூறியது எனக்கு வேதனையைத் தந்தது. என்றாலும் அவளின் வார்த்தைகளின் பின்னால் புதைந்திருந்த வேதனையான அனுபவங்கள் அப்போது எனக்கு விளங்கவில்லை. தமது புரட்சிகரத் தன்மையை காட்டிக்

www.tamilarangam.net

கொள்வதற்காக சமூகத்தைத் தொடர்ந்து குறைகூறும் சில சோம்பேறிச் சோசலிஸ்டுக்களில் ஒருத்தியாகவே அவளையும் நான் முதலில் நினைத்தேன். ஆனால் எம்சமூகத்தின் பாரம்பரியங்கள் என்ற சுண்ணும்புச் சூளையில் வீழ்ந்து வெந்துபோனவள் என்பது பின்னால் தான் எனக்கு விளங்கியது.

"உமா" உம்முடைய கலயாணப்படங்கள் ஒன்றும் எனக்குக் காட்டேல்லையே..." ஏதோ ஒரு சர்ந்தப்பத்தில் ஒரு முறை நான் அவளைக்கேட்க, அவள் வேதனையான ஒரு சிரிப்புடன், தன்கைப்பைக்குள் கடித உறை ஒன்றில் போட்டு வைத்திருந்த ஒன்றைப் படம் ஒன்றைக் காட்டினாள்.

சாதரணமாகவே அழகான அவள் திருமணக் கோலத்தில் மிகவும் நன்றாக் இருந்தாள். என்றாலும் தலைகவிழ்ந்து நிலத்தைநோக்கி இருந்ததால் அவளுடைய முகம் சரியாகத் தெரியவில்லை. படத்தின் பின்புறத்தில் ஏதோ எழுதியிருப்பது தெரியவே படத்தைத்திருப்பிப் பார்த்தேன்.

"அன்னையும், தந்தையும் ஆள்பிடிக்க
அண்ணனும், தம்பியும் உழைத்துத்தர
என் ஆன்மா மட்டும் அழுதிருக்க
அரங்கேறிய எனது விபச்சாரம்..."

"பேதலிக்க என் மனது தெரிந்திருந்தும்
பேசியபடி எல்லாமும் பெற்றுக் கொண்டும்
மேற்கொண்டும் நம்பாமல்...
அம்மி மிதித்து... அருந்ததிபார்த்து...,
சத்தியமும் கேட்கும்... உன்னைக் காண,
வெட்கப்பட்டுத் தான் தலைகுனிந்தேனே.
அல்லாமல்...,
நாணத்தால் அல்ல...ல

"உமா என்ன இது...யார் இப்படி எழுதினது. ..

"ஏன் நான்தான் எழுதினனான் நல்லாயில்லையோ..!

"கலியாணம் என்கிறது ஆயிரம் காலத்துப்பயிர் என்று சொல்லுவினம். அதை இப்படி அசிங்கப்படுத்துறது நல்லாய் இல்லைத்தான்...."

"ஏன் சுகந்தன் ....மனிதரையும், உணர்வுகளையும்விட சடங்குகளும் சம்பிரதாயங்களும் தான் எல்லாருக்கும் பெரிசாய் தெரியுது... இல்லையே..

"ஏன்..எங்கடசடங்குகள், சம்பிரதாயங்களில என்ன பிழையைக் கண்டிட்டீர்.."

"சடங்குகள், சம்பிரதாயங்களில ஒரு பிழையும் இல்லை. அதுகளை உருவாக்கின மனிசரிலதான் பிழை இருக்கு.."

"மனிசர் அதுகளை உருவாக்கினதே எல்லாரும் நல்லாயும், ஒழுங்காயும் இருக்கவேணும் என்றுதான். ஒழுங்காய் இருக்கிறது உமக்குப் பிடிக்கேலை என்றால் சம்பிரதாயங்களையும், சடங்குகளையும் ஏன் குற்றம் சொல்லுறீர்.." நான் சற்றுக் குத்தலாகவே சொன்னேன்.

"ம்...நீரும் ஒரே குட்டையில ஊறின மட்டைதானே. இந்தப்பிரச்சனைகள் எல்லாம் உமக்கு எங்கை விளங்கப்போகுது. .." அவள் சற்றுக் கோபமாகவே கூறிவிட்டு முகத்தைச் சட்டென்று திருப்பிக்கொண்டாள்.

அவளுடைய வாதம் அர்த்தமற்றது என நான் அப்போது நினைத்தாலும், அவள் சொல்ல வருவதை நான் விளங்கிக் கொள்ளவேண்டும் என்ற ஏதோ ஒரு ஆவலால் மீண்டும் பேச்சை வளர்த்தேன்.

"உமா.. சும்மா நெடுகலும் குற்றம் சாட்டிறதை விட்டிட்டு விசயத்தை விளக்கமாகச் சொன்னால்தானே தெரியும்" நான் அமைதியாகவே கேட்டது அவளிற்கு பிடித்திருந்தது.

"சுகந்தன்.. எங்கட சமூகத்தில பெண்களை எப்படி எல்லாம் நடத்தீனம் என்று யோசிச்சுப் பார்த்தீரே..சின்னனில எழும்பி நடக்கத் தொடங்கிறதில இருந்து. சாகிற வரைக்கும் எங்கட உணர்வுகள், ஆசைகள் எல்லாத்தையும் அடக்கி யாருக்காகவோதான் வாழவேண்டி இருக்கு. பருவம்வரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகப்பனுக்கும், கலியாணத்துக்குப் பிறகு கணவனுக்கும், வயோதிகத்தில மகனுக்கும் அடங்கித்தான் பெண்கள் வாழவேணும் என்றும், மண்ணுங்கட்டி வரைமுறைகள் வேற என்னென்ன மாதிரி எல்லாம் பெண்களைக் கேவலப்படுத்தலாமோ அந்தமாதிரி எல்லாம் அடக்கி, கேவலப்படுத்தி, அதற்கு சம்பிரதாயம் என்று பேர்வேற வைச்சிருக்கு.

உதாரணமாக பன்னிரண்டு, பதின்மூன்று வயசில இயற்கையாகவே ஒரு பெண்ணின்ரை உடலில ஏற்படுகின்ற மாற்றத்தைப், பந்தல் போட்டு, ஊரைக் கூப்பிட்டு அசிங்கப்படுத்திறதும், கலியாணம் என்ற பேரில முன்பின் கண்டறியாத யாரோ ஒருவனோடை, தாலிகட்டிட்டான் என்று அறைக்குள்ள அனுப்புறதும்.. சீ நாங்கள் என்ன கொம்பியூட்டரே நினைச்சமாதிரி எல்லாம் புரோகிறாம் பண்ணுறத்துக்கு.. கொம்பியூட்டர் கூட தன்னோடை ஒத்துப்போகாத சிலவற்றை நிராகரிக்க முடியும். ஆனால் எங்களால அது முடியாது..." அவளின் வார்த்தைகளில் இருந்த வேகமும், கண்களில் அரும்பியிருந்த நீரும் என்னைச் சிறிது கலங்கவைத்தன. என்றாலும் தயங்கியபடியே நான் தொடர்ந்தேன்.

"உமா.. தயவு செய்து என்னில கோபப்பட வேண்டாம். இந்த சம்பிரதாயங்களால பெண்கள் எப்படிப் பாதிக்கப் பட்டிருக்கினம் என்று உண்மையிலேயே எனக்கு விளங்கேல்லை.. நீர் மட்டுமில்லை எங்கட அம்மாமார் தொடக்கம்.. ஏன் அதுக்கும் முதலிலயும் கூட இதே முறையிலதான் எல்லாமே நடந்து வந்திருக்கு. பேசிச் செய்யிற கலியாணங்கள் பிழை என்றால் வேற எப்படித்தான் கலியாணங்கள் நடக்கிறதுல பேசிச் செய்யிற கலியாண முறை இல்லையென்றால் இன்றைக்கும் உம்மை மாதிரி எத்தினை பொம்பிளையள் கலியாணம் இல்லாமல் இருந்திருப்பினம் என்று யோசிச்சுப் பாத்தீரோ...?"

"சுகந்தன்.. இஞ்சை கனடா வெள்ளைக்காரச் சமூகத்தில பேசிச் செய்யிற கலியாண முறை இல்லைத்தான். அதால பொம்பிளையள் எல்லாம் என்ன கலியாணம் கட்டாமலேயே இருக்குதுகள்.."

"அப்படியென்றால் எங்கட பெட்டையளையும் இதுகளை மாதிரி நாளுக்கொண்டு பிடிச்சுக்கொண்டு திரியச் சொல்லுறீரே..?

"நிச்சயமாய் நான் அப்படிச் சொல்ல வரேல்லை. " ஆனால் காசு குடுத்து புருசன் வாங்கிற கேவலம் வேண்டாம் என்று தான் சொல்லுறன். உண்மையான மனித உணர்வுகளை மதிக்கச் சொல்லுறன். நாங்கள் யாராவது எங்கட மனசுக்குப் பிடிச்ச பெடியனோடை கதைச்சால், இல்லாட்டி காதலிச்சால், பிஞ்சில பழுத்தது எண்டும், ஆட்டக்காறி அது, இது எண்டும் எத்தினையைச் சொல்லி அவமானப்படுத்திறது. ஆனால் கலியாண வயது வந்ததும் அப்பா, அம்மாவுக்குப் பிடிச்ச எங்கட சாதிக்காறப் பெடியனைக் காசுகுடுத்து வாங்கி அவனோடை அனுப்புறது. நாங்கள் சீவிய காலம் முழுக்க வாழப்போற ஒருவனோடை மனம்விட்டுப் பழகிறதுக்கும், ஆளை ஆள் புரிஞ்சு கொள்ளுறத்துக்கும் எங்கை சந்தப்பம் கிடக்கு. குறிப்பாகச் சொன்னால் இதுக்கும் விபச்சாரத்துக்கும் வித்தியாசமில்லை. இரண்டிலையும் ஆளை ஆள் தொரியாமல் அடிப்படை அன்போ, புரிந்துணர்வோ இல்லாமல் ஏதோ ஒரு தேவைக்காக ஒன்று சேருகிறதுதான் நடக்குது. இரண்டுக்கும் பெயர்தான் வித்தியாசமே தவிர அடிப்படை ஒன்றுதான்.

"ஒருத்தியுடன் ஒரு இரவு களிப்பதற்கு ஒரு நோட்டுக் கொடுத்தால் அதற்குப் பெயர் விபச்சாரம்..
ஒருத்தியுடன் பல இரவுகள் களிப்பதற்கு பல நோட்டுக்கள் வாங்கினால்

அதற்குப் பெயர் கலியாணம்.." என்று யாரோ ஒருத்தி மனம்நோக எழுதிவிட்டுப்போனாள்"

உமாவின் குரல் தழுதழுத்தது. அவள் கூறியவற்றை உடனே ஏற்றுக்கொள்ள என்னால் அன்று முடியவில்லை என்றாலும், வாழ்கையில் அவள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றாள் என்பதை மட்டும் என்னால் நன்றாக உணரமுடிந்தது. அவளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வார்த்தைகள் ஒவ்வொன்றும், அவள் பட்ட வேதனையின் முழுவடிவமாக வெளிவந்தது. எம்மிடையே முழுமையான கருத்தியல் ஒற்றுமை அன்று இருக்கவில்லை என்றாலும், அவளுடைய வேதனை என்னையும் வேகவைத்தது இதற்குக் காரணம் என்ன? அவள் ஒரு பெண் என்பதாலா? அல்லது அவள் மேல் எனக்கென்ன காதலா? இல்லை மாறாக, அவள் என் இனத்தவள், எம்மைச் சார்ந்தவள் என்ற உணர்வு சிறிது சிறிதாக படரத்தொடங்கியது தான் காரணம். ஏதோ அவளுக்கு நானும் குற்றம் செய்து விட்டதாக என் உள்ளுணர்வு வாட்டியது. அன்று தான் நான் முதல் முதலாக என் வாழக்கையிலேயே என்னைத்தவிர மற்றவர்களைப்பற்றியும் சிறிது யோசிக்கத் தொடங்கினேன். ஓ... இதுதான் சமூக சிந்தனை உருவாக்குவதற்கான ஆரம்பமோ...?

சுண்டெலிகளின் உயிர் போவது தெரியாமல் விளையாடும் பூனைகள் போல, எமது பெண்களின் வேதனைகளையும், விரக்திகளையும் அறியாமல், நாம் நடாத்தும் சம்பிரதாய நாடகங்கள் எல்லாம் சரியானவை தானா..?

இது போன்ற கேள்விகள் எல்லாம் எனக்குப் பழக்கப்படாதவைதான், என்றாலும், இந்தக் கேள்விகளுக்கான விடைகள் எனக்குத் தெரிந்தே ஆகவேண்டும் என்ற உணர்வு என்னுள் வளர்ந்தது. இவ்வளவு காலமும் தெளிந்த நீரோடையாகத் தெரிந்த எம் சமூக அமைப்புமுறையினைச் சற்று அலசிப் பார்த்தபோது அதன் அசிங்கம் தெரிந்தது. அன்று முதல் என் வினாக்களிற்கான விடைகளைக் கொடுக்கும் அகராதியாக உமா மாறினாள். உளுத்துப்போன எமது இந்த சமூகத்தை என் உணர்வுகள் உழுது சென்றன.

"உமா.. நீர் சொல்லுறவற்றை என்னால ஏற்றுக்கொள்ள முடியுதுதான் என்றாலும் சில விசயங்களை முழுமையாக என்னால விளங்கிக் கொள்ள முடியேல்லை. உதாரணமாக பேசிச் செய்யிற கலியாணமுறை பிழையெண்டும், அப்படிச் செய்தால் புருசன், பெண்சாதிக்குள்ள உண்மையான புரிந்துணர்வு இருக்காது என்றும் சொல்லுறீர். ஆனால் எங்கட அப்பா அம்மா எல்லாம் என்ன காதலிச்சே கலியாணம் செய்தவை அவையெல்லாம் சந்தோசமாக இருக்கேல்லையே.."

சுகந்தன் நீர் சொல்லுறமாதிரி எங்கட அப்பா, அம்மா எல்லாம் காதலிச்சு கலியாணம் கட்டேல்லத்தான். ஆனால் அவையள் எல்லாம் உண்மையாகவே சந்தோசமாகத்தான் இருந்தினம் என்று எங்களுக்கு எப்படித் தெரியும், அவர்களுக்கு இடையில உள்ள கருத்து முரண்பாடுகளும் எங்களுக்கு வெளியில தெரியேல்லை, ஏனென்றால் பொம்பிளையளுக்கு என்று தனிப்பட்ட கருத்து இருக்கிறதும் குறைவு, இருந்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதும் குறைவு, பெண்களின்ர கருத்து புருசன்ர கருத்தாக இருக்க வேணும் எண்டும், குடும்ப வாழ்கையின்ர சந்தோசமே, புருசன் என்ன பிழை செய்தாலும், மனைவி அதை அனுசரிச்சுப் போறதிலையும்தான் இருக்குது, என்றுதான் இப்ப கூட எல்லாரும் சொல்லுறது. குடும்ப வாழ்க்கையில் வருகிற கருத்து முரண்பாடுகளை, எல்லாம் சமூகத்துக்குப் பயந்தும், பிள்ளைகளின்ர எதிர்காலத்திற்காகவும் பெண்கள் தொடர்ந்து தங்கட தலையில சுமந்து வாழுறத்துக்குப் பழக்கப்பட்டிட்டினம். படிப்பறிவும் இல்லாமல், வீட்டைவிட்டு வெளியிலையும் வெளிக்கிடாமல், அடுப்படியும், ஆட்டுக் கொட்டிலும் என்று பெண்கள் இருந்த காலத்தில வேணுமெண்டா நீங்கள் சொல்லுறது சரியாக இருக்கலாம். ஆனால் காலம் மாறிக்கொண்டு வருகுது. சந்திரனில கூட மனிதன் காலடி வைச்சு எத்தனையோ சாதிச்சிட்டான். ஆனால் நாங்கள் இன்னும் சந்திரன் சிவபெருமானின்ரை தலையில இருக்குது எண்டு விழல் கதை பேசிக் கொண்டிருக்கிறம்.

"உமா.. நீர் சொல்லுறதை ஆம்பிளயள் இல்ல, எத்தினை வீதமான பொம்பிளயாள் ஏற்றுக் கொள்ளுவினம் எண்டு நினைக்கிறீர்? புருசன் மார் ஒத்துக்கொண்டால் கூட சம உரிமையை விரும்பாத எத்தினை பெண்கள் இருக்கினம் வெளிநாடுகளுக்கு வந்த பெண்கள் தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உந்த சம உரிமையைப் பற்றிக் கனக்கக் கதைக்கினம்.., இப்ப வெளிநாடுகளில நடக்கிற எங்கட ஆக்களின்ர கலியாணங்கள் எவ்வளவோ பிரிஞ்சுபோகுது, நான் நினைக்கிறன் வெளிநாட்டு நாகரீகம் தான் உந்தப் பெட்டயள இப்படி மாத்துது எண்டு, நீர் என்ன நினைக்கிறீர்..?

"நிச்சயமாக நான் அப்படி நினைக்கேல்ல. எந்தப் பிரச்சனையை நாங்கள் எடுத்துக் கொண்டாலும் அதுக்கு அடிப்படைக் காரணம் பொருளாதார மாகத்தான் இருக்கும். அதே பொருளாதாரம்தான் எங்கட இந்தப் பிரச்சனைக்கும் அடிப்படையாக இருக்குது. எங்கட நாட்டில பெண்கள் தங்கட பொருளாதாரத் தேவைக்கு, கலியாணத்துக்கு முதல் தகப்பனையும், கலியாணத்துக்குப் பிறகு புருசனையும் தான் தங்கி வாழவேண்டியுருக்கு. பொருளாதாரத் தன்னிறைவு உள்ள பெண்களும் இருக்கினம் தான் என்றாலும் அவையள் மிக மிகக் குறைந்த வீதமானவர்களாக இருக்கிறதால நாங்கள் அவர்களை விதிவிலக்காக எடுத்துக் கொள்ளலாம். அப்படிப் பொருளாதாரத் தேவைக்காக இன்னொருவரைத் தங்கி வாழ வேண்டி இருக்கிற பெண்களால தங்கட கருத்துக்களை வலியுறுத்துறது என்பது சரியான கஷ்டம். அதனால தான் குடும்பங்களுக்குள்ள வருகிற கருத்து முரண்பாடுகளும், பெண்கள் பக்கம் நியாயம் இருந்தாலும் கூட இந்தப் பொருளாதாரத் தன்னிறைவு இன்மையால ஆண்களுக்குச் சாதகமாகத்தான் அமையுது. ஆனால் வெளிநாடுகளில நிலமை அப்படி இல்லை. எந்த ஒரு படிப்பறிவு இல்லாத பெண்ணாலயும் கூட ஒரு Factory இல வேலை செய்தாவது, தன்னையோ, தன்ரை குடும்பத்தையோ காப்பற்றிக் கொள்ளலாம். இந்த நிலையில இலங்கைக் குடும்பங்களுக்குள்ள கருத்து முரண்பாடுகள் வரேக்குள்ள, பெண்களால தங்கடை கருத்துக்களை வலியுறுத்திச் சொல்ல முடியுது. அது மட்டுமில்லை, பெண்களின்ர பக்கம் நியாயம் இருந்தால் கூட அதை ஏற்றுக்கொள்ளுறத்துக்கு ஆண்கள் எல்லாரும் இன்னும் சரியாகப் பக்குவப்படேல்லை. சரியானதை ஒத்துக்கொண்டாலும், நாளைக்கு தலைக்கு மேல ஏறிடுவாள் என்று நினைக்கிற ஆதிக்கப் புத்தியும், வரட்டுக் கௌரவங்களும் தான் உண்மையான பிரச்சனைகளுக்கான காரணமாய் இருக்கு. என்னதான் இங்கை வந்து இங்கிலீஸ் கதைச்சாலும், இதயங்கள் மட்டும் இன்னும் எங்கட எட்டடி வேலிக்குள்ளதான் இருக்குது.

வெளிநாட்டில மனிசியையும் வேலைக்கு அனுப்பாட்டால் நிலமை கஸ்டம் என்டு சொல்லி வேலைக்கும் அனுப்பிப்போட்டு, களைச்சு விழுந்து வேலையால வீட்டுக்கு வந்ததும், ஊரில அம்மாமார் மாதிரி புருசனுக்கு அடங்கிய மனுசியாய் வீட்டுவேலை எல்லாத்தையும் பொம்பிளயே தனியச் செய்ய வேணும் என்று எதிர்பாக்கிறது எவ்வளவு சிறுபிள்ளைத்தனம்.."

"குடும்பப் பிரச்சனைக்கு வெளிநாட்டு நாகரிகம்தான் காரணம் எண்டால், புருசனோட பிரச்சனைப்படுகிற பொம்பிளயள் எல்லாம் என்ன நடத்தை கெட்டதுகளே..? பிரச்சனைக்கான அடிப்படைக் காரணத்தை ஆராயாமல் திரும்பவும், திரும்பவும் பொம்பிளயளைக் குற்றம் சாட்டிற அதே பிழையைத்தான் நாங்கள் விட்டுக் கொண்டிருக்கிறம்."

உமாவின் சொற்களில் இருந்த கடுமையும், வேகமும் அதிகரிப்பதை என்னால் உணரமுடிந்தது. இருவரும் சற்று அமைதியானோம். உமா சாதரணமாக எதற்கும் சுலபத்தில் உணர்ச்சி வசப்படக்கூடியவள் அல்ல. என்றாலும் அன்று அவள் மிகவும் குழம்பியே காணப்பட்டாள். அவளுடைய விவாதத்திற்கும், அவளுடைய வாழ்கைக்கும், ஏதோ நிறைய சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தோன்றியது. என்றாலும் அப்படி இருக்கக் கூடாது என என் உள்மனம் வேண்டிக் கொண்டது. அவள் இதுவரை தன் கணவனைப்பற்றியோ, குடும்பத்தைப் பற்றியோ, என்னுடன் எதுவுமே பேசியதில்லை. அவளைப் பற்றிய விபரங்களை அறிய அவண்டும் என்ற ஆவல் ஒருபுறம், வேண்டாத விடயங்களைப் பேசி அவளை வேதனையடையச் செய்யக்கூடாது என்ற கவலை மறுபுறம், ஆவலே இறுதியில்

www.tamilarangam.net

வென்றது.

"உமா தயவு செய்து என்னைப் பிழையாக விளங்க வேண்டாம். உமக்கு விருப்பமில்லாவிட்டா இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தேவையில்லை..., நீர் உம்முடைய குடும்ப வாழ்கையில சந்தோசமாகத் தானே இருக்கிறீர்?"

அவள் சட்டென்று நிமிர்ந்து என்னை ஒருமுறை பார்த்துவிட்டு, மீண்டும் தலையைக் கவிழ்ந்து அமைதியாகி விட்டாள். அவளை வேதனைப்படுத்தி விட்டேனோ என நான் சங்கடப் பட்டுக் கொண்டேன். என்னில் சில வேளைகளில் எனக்கே கோபம் வந்தது. மற்றவர்களின் மனதை இலகுவில் அறிந்து கொள்ளும் திறமையோ அல்லது சங்கடமான கேள்விகளைப் பக்குவமாகக் கேட்கும் ஆற்றலோ எனக்கில்லை. என்றாலும் மற்றவர்களை வேண்டுமென்றே வேதனைப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் எனக்கில்லை. உமாவைப் பொறுத்தமட்டில் அவள்மேல் எனக்குள்ளது பாசமா, அன்பா, மதிப்பா அல்லது அனுதாபமா? எதுவென்றே எனக்குத் தெரியவில்லை. ஆயினும் அவள் வேதனைப்படுவதை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் அன்று தாங்கி கொள்ள வேண்டியதாயிற்று.

"சுகந்தன்.. உம்முடைய உந்தக் கேள்விக்கான விடை தெரியவேணும் என்றால் என்னுடைய கதை உமக்குத் தெரியவேணும். அதை உமக்குச் சொல்லுறது சரியோ அல்லது பிழையோ என்று கூட எனக்குத் தெரியேல்லை. என்றாலும் உம்மட்டை எல்லாத்தையும் சொல்லி என்ரை மணப்பாரத்தைக் கொஞ்சமாவது குறைச்சுக்கொள்ள வேணும் போல இருக்கு. என்னுடைய பிரச்சனையை விளங்கிக்கொள்ளுற அளவிற்கு நீர் பக்குவப் பட்டவரோ என்றும் எனக்குத் தெரியாது. இதுவரையில என்னுடைய அப்பா, அம்மா கூட நான் சந்தோசமாக இருக்கிறனா என்று அறிய விரும்பேல்லை. சில வேளை நான் சந்தோசமாக இல்லை என்று தெரியவந்தா வீணாகத்தாங்கள் கவலைப்படவேணும் எண்ட மாதிரி கலியாணம் முடிஞ்சதும் கைகழுவி விட்டிட்டினம். ஆனால் என்ரை கலியானத்தால தங்கட குடும்ப கௌரவமும், சாதிப்பெருமையும் பாதிக்கப்படக்கூடாது எண்டதில மட்டும் எவ்வளவு பிடிவாதமாக இருந்தினம்..."

உமா மீண்டும் அமைதியானாள் நடுங்கிய கைகளால், சிவந்துவிட்ட கண்களிலிருந்து வரும் நீரைத்துடைத்தபடி யன்னலினூடே தெருவை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். மௌனமாக மனதினுள் போராடும் அவளுடைய உணர்வுகளின் உயிரோட்டத்தை என்னால் உணரமுடிந்தது.

"சுகந்தன் உண்மையைச் சொல்லப்போனால் நான் சந்தோசமாக இல்லைத்தான். வாழ்கையை நேசிக்கிறத்துக்கு முதலில இதயம் வேணும் அந்த இதயம் இப்ப என்னட்டை இல்லை. ஏனென்றால் இதயத்தைப் பறிகொடுத்தவரிட்டை இருந்து அவ்வளவு இலகுவாக என்னால் அதை திருப்பி எடுத்துக்கொள்ள முடியேல்லை. இன்னும் சொன்னால் அதை நான் திருப்பி எடுத்துக்கொள்ள விரும்பவும் இல்லை."

"என்ன சுகந்தன் அப்படிப் பார்க்கிறீர்..ஸ ஆரையோ காதலிச்சு ஏமாத்திப்போட்டு இப்ப ஆரையோ கலியாணம் கட்டிவிட்டு என்னடா இவள் தத்துவம் கதைக்கிறாள் எண்டா பாக்கிறிங்கள்..ஸ உண்மை தான் .. நாங்கள் எல்லாரும் ஏதோ ஒரு விதத்தில யாரையாவது ஏமாத்தித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறம். காதலனை விட்டுக் கொடுக்கும்போது குடும்பம், பாசம் என்று சொல்லி நாங்கள் எங்களை ஏமாத்திறதும், தங்கடை சொந்த கௌரவத்திற்காகவும், தன்ர பிள்ளைகள் தான் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டாள் என்று சொல்லுற பெருமைக்காகவும், தாய் தகப்பன் பிள்ளையள ஏமாத்திறதும், எங்கடை கலை, கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம் தான் உலகத்திலேயே சிறந்தது என்று சொல்லி, மாற்றத்தை விரும்பாமல் சமூதாயம் தன்னைத்தானே ஏமாத்திறதும்...., .... எங்களில உண்மையாக வாழுற மனிதரே இல்லை என்று தான் சொல்ல வேணும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சுகந்தன் ஒரு பெண்ணுக்கு இயற்கையாகவே இருக்கிற மென்மையான உணர்வுகளின் அடிப்படையில தான் நானும் காதலிச்சன். காதல் உணர்வு என்பது அன்பு, பாசம் சோகம், கோபம் என்பனபோல மனிதனுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கிற ஒன்று. இந்த இயற்கையான உணர்வை செயற்கையான வரைமுறைகளால் ஏன் வலுக்கட்டாயமாகக் கட்டுப்படுத்தவேணும். காதல் உணர்வை ஒழுக்கக்கேடு என்று சொல்லி எதற்காக நாங்கள் நிராகரிக்க வேணும். காதலிக்கிறது ஒழுக்கக்கேடு என்றால் எங்கடை சமயங்களிலோ அல்லது காவியங்களிலோ வரும் எந்தக் கதாபாத்திரங்களுமே ஒழுங்கானவையாக இருக்கமுடியாது. முருகனும், ராமனும் செய்தால் அது தெய்வீகம், கிருஷ்ணன் செய்தால் அது லீலை. அதையே நாங்கள் செய்தால் அது காவாலித்தனம்,"

"ஆரம்பத்தில் நாங்கள் காதலிக்கும் போது எத்தனையோ ஆயிரம் கனவுகளுடன் தான் காதலிச்சம். உண்மையான காதலையும் பரஸ்பர புரிந்துணர்வையும் தவிர வேறு எதையுமே நாங்கள் நினைக்கவில்லை. பொருளாதாரம், சாதி, அந்தஸ்து என்று எல்லாவற்றையுமே எமது காதல் வென்றுவிடும் என்று நினைச்சம். அதேபோல எல்லாவற்றையும் வென்ற எங்களால குடும்பப்பாசம் என்ற ஒன்றை மட்டும் வெல்ல முடியவில்லை. எனக்கு மேல 33வயசில கலியாணம் ஆகாத ஒரு அக்கா, அதைவிட பெரிசான இரண்டு தங்கச்சிமார். "நீ நாசமாய்போனாலும் பரவாய் இல்லை மற்றப் பிள்ளையளின்ர வாழ்க்கையையும் சேர்த்தெல்லே நாசமாக்கப்போறாய்" என்று அம்மா தலையில அடிச்சுக்கொண்டு அழக்கிள்ள தங்கச்சிமார் இரண்டும் காலைப்பிடிச்சுக்கொண்டு நின்றதுகள், அக்கா அடுப்படிக்குள்ள இருந்து கண்ணீர் வடிச்சா, எனக்காகத்தான் அழுகின்ற என்றுதான் நான் முதலில நினைச்சன். ஆனா எனக்கென்ன இப்பவே 33வயசாச்சு, இன்னும் என்ன கொஞ்சக்காலம் தானே நான் இப்படியே இருந்துவிட்டுப் போறன் என்று பொய்யாக அக்கா தியாகம் செய்ய வெளிக்கிட்ட போது என்ரை அரைவாசிக்காதல் கரைஞ்சே போச்சு. "

"கடைசியாக அப்பாவாவது எனக்கு ஆதரவு தருவார் என்ற ஒரு சின்ன நப்பாசை இருந்தது. ஏனென்றால் அவர் என்னில வச்சிருந்த பாசம் அப்பிடி. எனக்கு செவ்வாய்க்குற்றம் இருக்கொண்டு சொல்லி அம்மா என்னை விரதம் பிடிக்கச் சொல்லுவா. அப்ப எல்லாம் நான் சாப்பிடாமல் இருக்கிறன் என்று அப்பாவும் சாப்பிடமாட்டார். ஒருமுறை எனக்கு செங்கமாரி வந்து மங்கமாரி ஆக்கி உயிரே போற நிலமையாக இருக்கும்போது எனக்காக விரதம் இருந்து, காவடி எடுத்து, தீ மிதிச்சு, அப்பா பட்ட கஷ்டம் என்ரை மனதில இன்னும் அழியாமல் இருக்கு. அப்பிடி எனக்காக உயிரையே விடுகிற அளவிற்கு பாசம் வைச்சிருந்த அவரால விருப்பமே இல்லாத கலியாணத்திற்கு வேள்வி ஆடுமாதிரி கண்ணீரோட மணவறைக்குப் போன என்ர வேதனையை மட்டும் ஏன் விளங்கிக் கொள்ள முடியாமல் போச்சு.."

"உமா தயவுசெய்து அழாதையும்... நாங்கள் எல்லாரும் எங்கட வாழ்கையில எதோ ஒரு கட்டத்தில ஏதோ ஒரு வேதனையான நிகழ்ச்சியை சந்திச்சுத்தான் இருக்கிறம், சில பேருக்கு அது வெறும் சம்பவமாகப் போய்விடுகிறது. சிலபேருக்கு அதுவே சரித்திரமாக மாறிடுது. நினைச்சது கிடைக்கவில்லை என்றால், கிடைச்சதை நினைத்து வாழப்பழகிக் கொள்ளவேணும் என்று சொல்லுவினம்.."

சுகந்தன்.. கிடைச்சதை நினைத்து வாழுறதென்றால், மனிதன்றை விருப்பு வெறுப்பு என்ற பேச்சு எதுக்கு, பிறப்புரிமை, அடிப்படை உரிமை என்ற வாதம் எதுக்கு, இல்லை.. எங்கடை தேசிய விடுதலைப் போராட்டம் தான் எதுக்கு. கிடைச்சதை மட்டும் நினைச்சு ஒரு சமுதாயத்தால வாழ முடியாது என்றதால தான் உலகத்தில போராட்டங்களே நடக்குது. அப்படி இருக்கும்போது அந்த சமுதாயத்தின்ர அங்கத்தவனை தனிமனிதனால மட்டும் அந்த

www.tamilarangam.net

மாதிரி எப்படி வாழமுடியும்..."

"சரி வாழ முடியாதுதான் .ஆனுல் தன்னுடைய உரிமைகளுக்காகப் போராடுகின்ற சமூகங்களைப்போல, ஏன் தனிமனிதனுல தன்னிடைய நியாயமான விருப்பங்கள் உணர்வுகளுக்காகப் போராடமுடியவில்லே. போராட்ட காலத்தில ஒரு சமூகம் எவ்வளவையோ தியாகம் செய்ய வேண்டியிருக்குது. அதுபோல குடும்பம், பாசம்போன்ற சிலவற்றை விட்டுக்குடுக்காமல் தனிமனிதனுலயும் போராடமுடியாது. உம்முடைய காதலில நியாயம் இருந்ததென்ருல், ஏன் உம்மால அதற்காக போராடமுடியாமல் போச்சு, நீர் அவரை மானசீகமாகக் காதலிச்சிருந்தா, எப்படி அவ்வளவு இலகுவாக உம்மால அவரை விட்டுக்குடுக்க முடிஞ்சுது. நீங்கள் எல்லாம் சந்தோசமாக வாழுறத்துக்காகக் காதலிக்கிறிங்களா? இல்லே.. காதலேத்தியாகம் பண்ணுறத்துக்காகவே காதலிக்கிறிங்கள..? இப்ப அனியாயமாக நீர் இரண்டு பெடியன்ர வாழ்கையைக் கோள்விக்குறியாக்கிவிட்டீர்.

நான் சட்டென்று நிறுத்திவிட்டு உமாவைப் பார்த்தேன். பேச்சு வேகத்தில் அப்படிக் கூறியது ஏற்கனவே நொந்து போயிருக்கும் அவளே மேலும் பாதித்து விடுமோ என்று பயப்பட்டேன். ஆனுல் உமா எந்த ஒரு சலனமும் இல்லாமல் நிலத்தைப் பார்த்தபடி இருந்தாள். கைகளின் மேற்புறத்தில் விழுந்த கண்ணீர்த்துளிகள் அவளுடைய இதயம் அழுவதைக் காட்டின. நான் சங்கடப்பட்டுக் கொண்டேன். தன் வேதனைகளேக் கூறவந்தவளே வேண்டுமென்றே கிள்ளிவிட்டேனே..?

"உமா உம்மை வேதனைப்படுத்த வேணும் என்ற எண்ணத்தில் நான் அப்படிச் சொல்லவில்லே. ஆனுல் எங்கடை தவருன முடிவுகளால அதுக்கு சம்பந்தம் இல்லாத வேற எத்தனைபேர் பாதிக்கப்படுகினம் என்பதைச் சுட்டிக் காட்டிறத்துக்குத் தான் அப்படிச் சோன்னனுன்."

"நீங்கள் சொன்னதிலே தவறில்லேத்தான் சுகந்தன்.. ஆனுல் என்னுடைய மிகுதிக் கதையையும் கேட்டால்தான் உங்களுக்கு உண்மையான நிலே விளங்கும். "

உமா ஒரு முறை பெருமூச்செறிந்து கொண்டாள் நினைவுகள் பின்னுேக்கி ஓடுவதை மங்கிய அவள் கண்கள் காட்டின. கண்ணீரை மீண்டும் ஒருமுறை துடைத்து விட்டுக் கொண்டு அதே கண்ணீர்க் கரங்களால் கழுத்திலிருந்த தாலியை சட்டைக்கு வெளியே இழுத்து இறுகப்பற்றிக் கொண்டபோது அவள் கண்ணீர்கள் வெறுப்பைக் கக்கின.

"எங்கட விசயம் வீட்டில தெரிஞ்சு எவ்வளவோ பிரச்சனைகள் வந்து நான் பட்ட வேதனை கொஞ்சமில்லே. தங்கடை உயிரேபோனுலும் எங்களுடைய காதலே அங்கீகரிக்க வீட்டில தயாரில்லே. அக்காவின்ரை கலியாணம் முடியும்வரையும் நாங்கள் இரண்டு பேரும் சந்திச்சுக் கொள்ளாமல் இருக்கிறது என்று முடிவெடுத்தம். அக்காவுக்கும் கலியாணப் பேச்சு நடந்து. எல்லாமும் நிச்சயமும் பண்ணியாச்சு. எவ்வளவே காலமாக அடுப்புக்குள்ளயே இருந்து களேச்சுக் கறுத்துப்போன அக்காவின்ர முகத்தில அப்பதான் சந்தோசம் தெரிஞ்சுது. ஒவ்வொருநாளும் அக்கா புதுப் பொலிவோட கலியாணத்திற்கு தயாரகிக்கொண்டிருந்தாள். அவள் மட்டுமில்லே எங்கடை முழுக்குடும்பமே அப்பதான் சந்தோசமாக இருந்தது. நான் கூட, அக்காவின்ர கலியாணம் முடிஞ்சால் என்ரை பிரச்சனையும் ஓரளவு தீரும் என்ற சுயநலத்தில சந்தோசமாகத்தான் இருந்தன். ஆனுல் இதே சந்தோசமான நிலேமையைப் பாவிச்சு என்னுடைய வாழ்கையை நாசமாக்கிறத்துக்கு அப்பாவும், அம்மாவும் முயற்சிப்பினம் என்று நான் கனவில கூட நினைக்கேல்லே. அக்காவின்ர கலியாணத்துக்கு இன்னும் ஒரு மாதம் தான் இருக்கு என்ற போது, அப்பாவந்து ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். நான் வேற சாதிப் பெடியனைக் காதலிக்கிறது மாப்பிளே வீட்டாருக்குத் தெரிஞ்சு போச்சுதெண்டும் அதனுல இந்தக் கலியாணத்திற்குச் சம்மதிக்கத் தயாரில்லே எண்டும் அப்படி அக்காவின்ர இந்தக் கலியாணம் நடக்க வேணும் எண்டால்,

www.tamilarangam.net

நான் முதலில வேறையாரையாவது கலியாணம் செய்யவேணும் என்று மாப்பிளை வீட்டார் சொன்னதாக அப்பா சொன்னுர்."

" என்னுடைய நிலமை எப்படி இருந்திருக்கும் என்று கொஞ்சம் நினைச்சுப் பாருங்கோ சுகந்தன்.."

"நான் கொஞ்சம் பிடிவாதக்காரி என்று வீட்டில தொரியும். அதால என்னை ஒருதரும் வற்புறுத்தேல்ல, ஆனுல் ஒவ்வொரு நாளும் என்னுேட கதைக்காமல் மூலைக்கு மூலை எல்லாரும் மௌனமாக இருந்து, ஏதோ நான் தான் தங்கட சந்தேசத்தில மண்போட்டிட்டதாக நடந்து கொண்டினம். அப்பா மரத்துக்குக் கீழ பாயப்போட்டுப் படுத்தபடி சன்னியாசி மாதிரி தவம் செய்யத் தொடங்கினுர். அம்மா கிணத்தடியில இருந்து ஊரைக்கூப்பிட்டு ஒப்பாரிவைச்சா, அக்கா அறைக்குள்ள தலைவிரி கோலமாக தண்ணி, சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்தாள்.."

" எந்தப்பாசத்துக்காக நான் என்னுடைய சந்தோசத்தை விட்டுக் குடுத்து நரகத்தில வாழ்ந்து கொண்டு இருக்கிறனே, அதே பாசத்தை வைச்சு எங்கட குடும்பத்தில எல்லாரும் தங்கட சுயநலன்களுக்காக என்னைப் பழிவாங்கிவிட்டினம்.

எனக்காக யாருமே தங்களை விட்டுக் குடுக்கப்போறதில்லை என்று தெரிஞ்சபோதுதான் நான் என்னையே எரிச்சுக்கொள்ளுறதுக்கு முடிவெடுத்தன். ஆனுல் எனக்குள்ளயே ஒன்றுகிவிட்ட அவரை என்னுல எடுத்தெறிய முடியேல்லே. எப்படியாவது ஒருமுறை அவரைச் சந்திச்சுக் கதைக்கிறதுக்கு நான் படாத கஷ்டம் இல்லை. என்ரை கஷ்டகாலம் அவர் அப்ப இயக்கத்தில இருந்தார்.. அதோட என்னுடைய இயக்கமும் அடங்கிப் போச்சு.."

முகத்தை இருகைகளாலும் பொத்தியபடி கோவென்று வாய்விட்டுக் கதறி அழத்தொடங்கினுள் உமா. எத்தனையோ நாட்களாக இதயத்தில் தேங்கிக்கிடந்த வேதனைகளை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. என்னுல் மட்டும் முடிந்ததா என்ன? கண்கள் கலங்கிவிடுமோ என்ற நிலையில், எச்சிலை ஒருமுறை உள்ளே விழுங்கிக்கொண்டேன் இன்னெருவனுக்காக வேதனைப்படும் இந்த உணர்வு முற்றிலும் புதியது. எப்படிப்பட்ட ஒரு மனிதனுக்கும் ஒரு மென்மையான பக்கம் இருக்கத்தான் செய்கிறது. எனது அந்த மென்மையான பக்கம் உமாவுக்காக அழுதது. சிறது நேரம் இருவரும் எதுவுமே பேசவில்லை. ஆனுல் எம் உணர்வுகள் பேசின. எத்தனையோ பேர் எதற்காகவோ எல்லாம் அழுவதை நான் பார்த்திருக்கின்றேன். அந்த அழுகைகள் எல்லாம் என்னை எதுவுமே செய்யவில்லை ஆனுல் உமாவின் இந்த அழுகை, சமூகத்தின் மடமையால் பாதிக்கப்பட்டு எம் பெண்கள் எல்லோருடைய ஒட்டு மொத்தமான ஓலமாக எனக்குப் பட்டது. மடைமையால் நாம் இழந்து விட்ட இறந்தகாலமும், இன்னும் மாற மறுப்பதால் நாம் இழக்கப்போகும் எதிர்காலமும் சேர்ந்து அழுதன,

"சுகந்தன்.. நான் எனக்காகக் கூட அழேல்லே. ஆனுல் அவருக்காக அழுகிறன். இவ்வளவு காலமாகத் தன்னைக் காதலிச்சுப்போட்டு, இன்னெருவனைக் கலியாணம் கட்டிட்டாள் எண்டு என்னில கோபப்பட்டிருந்தாலோ, அல்லது திட்டியிருந்தாலோ கூட நான் பொறுத்துக் கொண்டிருப்பன். ஆனுல் நான் கலியாணம் செய்திட்டன் என்று தெரிஞ்சதும் அவர் கோபப்படேல்ல, மாறுக நான் விரும்பாமல் இந்தக் கலியாணம் நடந்திருக்கு உமா என்ன கஷ்டப்படப் போகிறுளோ என்று வேதனைப்பட்டிருக்கிறுர். என்று எங்களுக்கு அப்ப உதவி செய்த அவரின் சினேகிதி ஒருத்தி வந்து சொன்னு..

எங்கட சினேகிதர் சிலபேர் என்னைப்பற்றிக் குறைவாக அவரிடம் சொல்லேக்க, அவர் மட்டும் என்னை விட்டுக் குடுக்கவே இல்லை. உமா நிச்சயமாக இதுக்கு விருப்பப்பட்டு உடன் பட்டிருக்கமாட்டாள். அவளைப்பற்றி எனக்கு நல்லாய் தெரியும் அவளைப் பொறுத்தமட்டில இது அவளுடைய கட்டுப்படுகளையும் மீறின ஒரு விபத்துத்தான் எங்களுடைய சமூகத்தில இருக்கிற

www.tamilarangam.net

பெண்களுக்கு அது ஒன்றும் புதிதில்லே, நாங்களே அதுகளை அடிச்சு, அழவைச்சு கட்டாயமாக வேறயாருக்காவது கலியாணம் கட்டிவைக்கிறது. பிறகு காதலிச்சிட்டு அவள் கைவிட்டிட்டால் என்று குறை சொல்லுறது. இது எந்த விதத்தில நியாயம் அப்பா, அம்மா, சொந்தம், சமூகம் என்று எத்தனையோ நூறு கட்டுப்பாடுகளுக்குள்ள வாழ்ந்து பழகிப்போன பெண்களால காதலுக்காக அதுகளை ஏதிர்த்து எவ்வளவு காலம்தான் தனியாகப் போராடமுடியும். என்னைப் பொறுத்தமட்டில என்ரை உமாவாக அவள் ஒரு பிழையும் விடேல்லே. இந்த சமூகத்தில ஒருத்தியாக சமூகத்தாலேயே பாதிக்கப்பட்டிருக்கின்றுள், போரட்ட காலத்தில அன்னிய இராணுவத்தால கெடுக்கப்படுகிற ஒரு பெண்ணின்ரை நிலே எப்படியோ அப்படித்தான் உமாவும் தன்னுடைய சொந்த சமூகத்தாலேயே அவளுடைய விருப்பத்திற்கு எதிராகக் கெடுக்கப்பட்ட ஒருத்தி. சர்ந்தப்பம் சூழ்நிலேகளால அவள் இன்றைக்கு இன்ஞெருவனேடை இருக்கவேண்டி வந்தாலும், என்னேயே நினேச்சுக் கொண்டிருக்கின்ற அவள் எப்ப திருப்பி என்னட்ட வந்தாலும், அதே பழைய உமாவாக நான் ஏற்றுக்கொள்ளத்தயார். ஆனுல் முடிவெடுக்கிறது அவளின்ர கையிலதான் இருக்கு கற்பு என்கிற போலியான ஒன்றிற்காக எதிர்காலம் முழுவதையும் போலியாகவே வாழப் போகின்றுளா ? அல்லது காதல் என்ற உண்மைக்காக தன்னுடைய நியாயமான உணர்வுகளே மதிச்சு வாழப்போகிறுளா?

"நான் என்ன முடிவு எடுக்கிறது சுகந்தன்..? எந்தக் காலத்திலயும் என்னுல அவரை மறக்கவே முடியாது. அவரைப் பிரிஞ்சு இருக்கிற ஒவ்வொரு நிமிடமும், திரும்பவும் அவரைப்பார்க்க வேனும், என்னே முழுமையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற அவரின் மடியிலே தலேவைச்சு, உலகத்தையே மறந்து என்ரை வேதனேகள் எல்லாம் தீருமட்டும் அழவேனும் எண்டு ஏங்கிக் கொண்டிருக்கிறன். தயவு செய்து சொல்லுங்கோ சுகந்தன் நான் என்ன முடிவெடுக்கிறது..?

"உமா உம்முடைய வேதனேகளே என்னுல நன்ருக விளங்கிக் கொள்ள முடியுது. நீர் விரும்பின வாழ்கையைத் தெரிவு செய்யிற உரிமை, உம்மட்டை இருந்து வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டிருக்கு என்று நினேக்கும் போது, அதுக்குக் காரணமாக இருந்த ஆட்களே எல்லாம் வெட்டவேனும் போல இருக்கு, ஆனுல் நீர் விரும்பினுலோ, விருப்பபாவிட்டாலோ இப்ப இன்ஞெருவனுடைய மனேவி. நீர் எடுக்கப்போற முடிவுகளால அந்த மனிதர் பாதிக்கப்படப்போறதை நினேச்சுப் பார்த்தீரோ. .?

"அவரைப்பற்றித்தான் கலியாணப்படத்தில எழுதியிருந்த கவிதையில படிச்சீங்களே சுகந்தன்..! எனக்கு ஒரு ருேடில குசநைனே இருக்கு என்று தெரிஞ்சும் அண்ணே குடுத்த 3 லட்சம் காசுக்கும், 30 பவுண் நகைக்குமாக தன்ரை தன்மானத்தையே விட்டுக்குடுத்தவர்தான், இந்த நிலேமையில் எவ்வளவு குடுத்தாவது எனக்குக் கலியாணம் செய்துவைப்பினம் என்று தெரிஞ்சு, கிளிநொச்சிக் காணியையும், கனடாவிற்குத் திரும்பி வாறத்துக்கு ரிக்கற் காசும் தரவேனும் என்று கேட்டு கேவலப்பட்டுக் கொண்டவர்தான். இஞ்சைவந்தும் தன்ரை இயலாமையை ஒத்துக்கொள்ள மனமில்லாமல், வீட்டில சும்மா இருந்தால் எனக்கு திமிர்கூடிப் போய்விடும் என்று சொல்லி வேலேக்கும் அனுப்பிப்போட்டு ஏதோ என்னே வாழ்கை முழுக்கவைச்சு சாப்பாடு போடுற தன்ரை தியாகம் எல்லாருக்கும் வராது என்ற வேதாந்தம் வேற இப்படியான ஒருவரின்ரை வாரிசு என்ரை வயித்தில வளரக்கூடாது என்பதற்காக நான் கருத்தடை செய்யிற சட்டம் தெரியாமல், எனக்குக் குழந்தையே பிறக்காது என்று நினேச்சு, அதுக்குவேறை நஷ்டஈடு கேட்டு நச்சரிச்சுக் கொண்டிருக்கிற இவரைப்பற்றி, நான் எதுக்குக் கவலேப்படவேனும்? எனக்கு கனடா வேண்டாம் உண்மையான மனிதர்தான் வேனும், கஞ்சிகுடிச்சு, காலில புழுதிபடியிற வாழ்கை என்றுலும் பரவாயில்லே, இதயத்தில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புழுதி படியாமல் இருக்கிற வாழ்கைதான் வேணும். இப்ப சொல்லுங்கோ சுகந்தன் நான் என்ன முடிவெடுக்கிறது..?

அவளுடைய வார்த்தைகளில் இருந்த உறுதி என்னைப் பலமாகச் சிந்திக்கவைத்தது. அவளுடைய வாழ்கையில் மிக முக்கியமான முடிவு எடுப்பதற்காக நானும் கலந்தாலோசிக்கப்படுகிறேன் ஆம்.. அவள் என்ன முடிவு தான் எடுப்பது? முதலில் அவள் என்ன குற்றம் செய்தாள்? எமது சமூகத்தில் பிறந்தது குற்றமா? அதுவும் பெண்ணுகப் பிறந்தது குற்றமா? இயற்கையான உணர்வுகளின் உந்துதலால் தன் இதயம் விரும்பியவனைக் காதலித்தது குற்றமா? அல்லது தன்னையே எரித்துக் கொள்ளுமளவிற்குத் தன் குடும்பத்தில் பாசம் வைத்திருந்தது குற்றமா? எது குற்றம்? எதுவுமே இல்லையென்றால் பின் எதற்காக அவள் பாதிக்கப்படுகின்றுள்? எதற்காகப் பழிவாங்கப்படுகின்றுள்? எமது பெண்ககளின் இந்த இழிவான வாழ்கைக்குப்பின் யார்தான் காரணம்? பிள்ளைகளின் நல்ல எதிர்காலம் தான் தங்களுடைய சந்தோசம் என்று கூறி பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களை அறியாது கண்மூடித்தனமாக முடிவெடுக்கும் பெற்றோர்கள் காதலையும் கண்ணியத்தையும் மதியாமல், காசையும் காணியையும் மதித்து நடக்கும் கலியாணங்கள் இவையெல்லாம் சடங்குக்ள், சம்பிரதாயங்கள் என்ற சமூக வரைமுறைகள்.

ஓ.... எத்தனை ஆயிரம் வேலிகள் எமக்குள். இந்த வேலிகள் எல்லாம் வெட்டப்பட்டு, அதற்குள் கேட்கும் வேதனைக்குரல்கள் எல்லாம் ஆகாயத்தை அளக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கும் இக் காலத்தில், இன்னமும் கலியாணத்தில் அருந்ததி பார்ப்பதாக மட்டுமே ஆகாயத்தைப் பாக்கும் எமது பெண்களின் அவலம் எப்போதுதான் தீரப்போகிறது?

எத்தனையே ஆயிரம் கனவுகளை மனதில் சுமந்தபடி மலரும் மலர்கள் வாடும் முன்னே வெட்டப்படுவது ஏன்...?

எந்தக்காலத்திற்கும் சமமானதும், எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என்ற நியூட்டனின் விதி, அடிக்க அடிக்கத் தாங்கிக்கொண்டே இருக்கும் எமது பெண்களைப் பொறுத்தமட்டில் பொய்யாவது ஏன்...?

இந்தக் கேள்விகள் எல்லாம் ஏற்கனவே கேட்கப்பட்டவை தான்ஸ இவை எல்லாம் பதிலளிக்கப்பட்டாக வேண்டும். விடிவைக் கொடுக்காத விதிகள் மாற்றப்பட்டாக வேண்டும்.

கற்பு...! கண்ணகிக்கும், சீதைக்கும் வேண்டுமானுல் அது பெருமையைக் கொடுக்கட்டும். ஆனுல் தற்காலத்து எமது உமாக்களின் யாதார்த்தமான வாழ்கைக்குத் தடையாக வேண்டாம்.

பெண்மை..! கம்பனுக்கும், இளங்கோவிற்கும் வேண்டுமானுல் காவியம் பாட உதவட்டும். ஆனுல் போலியான வருணனைகளினுல் அது எம் பெண்களைக் கேலி செய்யவேண்டாம்.

யார் இந்த உமா? அவர் யாரோ ஒருவருடய மகளோ, யாரோ ஒருவருடைய மனைவியோ, யாரோ ஒருவருடைய காதலியோ மட்டுமல்ல.

அவள் எம்மவள். நாம் பிறந்த அதே மண்ணின் மகள். பென்னம் பெரிய கனவுகளுடன் தன் சின்னஞ்சிறு கால்களால் எமது செம்மண்ணிலே செல்லமாகத் துள்ளித்திரிந்தவள். இயற்கை நிதியால் தன் இறகுகளை அகல விரித்து இனபமாக வானிலே சிறகடித்துப் பறந்தவள்.

இன்பங்களை எல்லாம் முழுமையாக அவள் அனுபவிக்கத் தொடங்கு முன்பே, கால்களுக்கு விலங்கு போட்டும், சிறகுகளை வெட்டி வீழ்த்தியும், அவள் கனவுகளிற்குக் கல்லறை கட்டியது யார்?

நாம் தான்! எமது சமூகத்தின் அங்கத்தவர்களான நாமே தான். இன்னம் இப்படியான எத்தனை ஆயிரம் உமாக்களை நாம் உருவாக்கப் போகின்றேம். விடியலைக்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணபதற்காகப் படைக்கப்பட்ட கண்களை, அழுவதற்கு மட்டுமா எம் பெண்கள் பயன்படுத்த வேண்டும். புறநானூற்றுத் தமிழ் பெண்ணில் இருந்து, பாரதி கண்ட புதுமைப் பெண்வரை அகராதிகள் மட்டும்தான் மாறுகின்றனவே தவிர அர்த்தங்கள் மட்டும் அப்படியேதான்.

பறவைகள் எல்லாம் ஒரு எல்லைக்குட்பட்டுத்தான் பறக்கின்றன என்பது இயற்கையின் நியதி. ஆனால் எல்லைகள் குறுகிவரும்போது நியதிகள் மாற்றப்பட வேண்டும்...!

உமாவில் புது இரத்தம் ஊறுவதைப்போல, எனது மனத்திலும் ஒரு புதிய தெளிவு. என்னில் எனக்குச் சற்றுப் பெருமையாகக் கூட இருந்தது. ஏனெனில் மாற்றங்களை வேண்டும் மனிதனாக நான் மாறுகின்றேன் அல்லவா..! அவளுக்கு யதார்த்தமான முடிவைக் கூறக்கூடிய தெளிவு இந்த தைரியத்தில் அவள் கண்களைக் கூர்ந்து நோக்கினேன்.

"உமா.. ஏற்கனவே அரைவாசி வாழ்கையை எந்தவித அர்த்தமும் இல்லாமல் கழிச்சுப் போட்டம். இன்னும் அரைவாசி வாழ்கைதான் மீதம் இருக்கு. அதையும் ஒருமுறைதான் வாழப்போறம். அதை முழுமையாகவும், சந்தோசமாகவும் வாழவேணும். அதுக்க சலனமில்லாத இதயம், புரிந்துனர்வுள்ள துனையும்தேவை. இன்றைக்கு எங்களால யதார்த்தமாக வாழமுடியவியேல்லை என்றால், நாளைக்கு யாதர்த்தமான சந்ததியையும் எங்களால உருவாக்க முடியாது."

நீர் எடுக்கப் போகிற நடைமுறையான முடிவால, உமது பெற்றோர் உட்பட கனபேர் பாதிக்கப்படலாம். அதுக்காக நீர் பலியாகிறது நியாயமில்லை. இவள் செய்த வேலையால ஊருக்குள்ள தலை நிமிர்ந்து நடக்கவே முடியேல்லை என்று தங்களைப்பற்றித்தான் தொடர்ந்தும் கவலைப்படுவினமே தவிர, உமது சந்தோசமின்மைக்காகக் கவலைப்படமாட்டினம். அதை அவளின்ரை தலைவிதி என்றோ, இல்லாவிட்டால் ஒரு மாதிரி அனுசரிச்சுப் போயிருக்கலாம் தானே என்றோ ஒரே வார்த்தையால முடிச்சுப் போடுவினம்.

புருசன் கழுத்தில கட்டுற தாலி இதயத்தில இறுகவேணும், இல்லா விட்டால் அதுக்கு அர்த்தமே இல்லை. வெறும் கயிறு தான். தாலி அன்பின் அடையாளமாக இருக்கவேணுமே தவிர அடக்கு முறைக்குச் சின்னமாக இருக்கக்கூடது. உம்முடைய கழுத்தில இருக்குறதுக்கான அர்த்தம் தெரியுமே..ல ஆகவே நீர் அதைக்கழட்டி எறியிறத்துக்குக் கன நேரம் யோசிக்கத் தேவையில்லை. இன்னும் காலத்தை வீணாக்காமல் உமது காதலனோடை தொடர்பு கொள்ளும், உம்முடைய உண்மையான சந்தோசத்திற்காக நான் என்ன உதவி வேணுமானாலும் செய்வன்..!

எனது இதயத்திலிருந்து வந்த வார்த்தைகள் என்றபடியால் அவை அவள் இதயத்தையும் தொட்டது.

கண்ணளில் புத்தொளியுடன் உமா தைரியமாக நிமிர்ந்து பார்த்தாள். பலநாட்கள் செமபட்டினி கிடந்த ஒருவனுக்கு அளிக்கப்படும் அறுசுவை உணவைப்போல, அன்பிற்காக அதிக காலம் ஏங்கிய அவள் இதயத்தில் ஆறுதலான எனது வார்த்தைகள்.

எனது இந்த முடிவு ஏற்கனவே அவளால் எடுக்கப்பட்டது தான் என்றாலும், அம் முடிவுக்கு அர்த்தம் கூறி ஆதரவளித்த என் நட்பு அவளுக்கு மேலும் நம்பிக்கையைக் கொடுத்தது.

ஆம்..! உமா இனி வாழப் போகின்றாள். தான் நினைத்தபடி..., தான் விரும்பியவனுடன்.... சந்தோசமாக...!

எல்லைகள் இடம் கொடுக்காதவிடத்து அவை மீறப்படுவது நியதி...!

"சுகந்தன்.. என்னுடைய வாழ்க்கையிலே உங்களை நான் மறக்கமாட்டன்.."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன் கைகளை எடுத்து முத்தமிட்டுக்
காள்கிறுள் உமா, அந்த எச்சில் ஈரம்
ாயுமுன், எம் இருவருடைய கண்களிலும்
ரம், ஆனுலும் இதயங்கள் மட்டும் சிரித்துக்
காண்டன. உண்மையாக!!!

இடைவெளி. ... ...

பிரபஞ்சத்தைக் கருதுவோமாகுல், விளங்காமல் இருப்பவை போல் தோன்றுவதெல்லாம், இயற்கைக்கு மாருனவைபோல் தோன்றுவதெல்லாம் தெளிவானதாக, இயற்கையானதாக, இருப்பதைக் காணக் கூடியதாகயிருக்கும். உண்மையில் சார்பியற் கோட்பாடானது இப்பிரபஞ்சத்தை வெகு துல்லியமாக, தெளிவாக, சரியாக, நியூட்டன் கோட்பாடுகளை விட, விளக்கி நிற்குமொரு கோட்பாடாகும்.

மேலதிக விபரங்களிற்கு வாசிக்க வேண்டிய நூல்கள்.


1) ABC oF Relativity by Bertrand Russell
2) Other Worlds by Paul Pauis
3) one. two. three...infinity by George Camow
4) In Search of Big Bang by John Gribbin
5) Eintein's dieam by Barry Parker
6) The Darkside of the Universe by JamesTrefill
7) The Lighter side of Gravity by Jayant.V. Narlikar
8) Space, time and beyond by Bob Tobon
9) Eintun by Teremy Bernstern.


## புதிய வெற்றி

ஒன்ராறியோ மாநிலத் தேர்தலில் முதற் தடவையாக சோசலிச கோட்பாடுகளைக் கொண்ட புதிய ஜனநாயக கட்சி பெரும்பான்மை வெற்றியீட்டியுள்ளது. செப்டம்பர் 6ம் திகதி நடைபெற்ற தேர்தலில் 74 ஆசனங்களை வென்று பதவி ஏற்கப் போகின்றது பு.ஜ.க (NDP). பொறுத்திருந்து பார்ப்போம்.



BOB RAE

www.tamilarangam.net

# மௌன ஊர்வலம்

30 ஆனி 1990 கலை இலக்கிய மன்றமும், மனிதஉரிமைக்கான இலங்கையர்களும் இணைந்து இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை கண்டித்தும்,தத்தம் குறுகிய நோக்கங்களுக்காக அப்பாவி பொதுமக்களை கொலை செய்வதை உடன் நிறுத்தும்படியும்,இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கு இலங்கை அரசின் இராணுவத் தீர்வை கண்டித்தும் மௌன ஊர்வலம் ஒன்று வெலஸ்லி பாராளுமன்ற சந்தியில் ஆரம்பித்து ஒன்ராறியோ பாராளுமன்ற முன்றலில் முடிவடைந்து, கூட்டமும் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் மனித உரிமை தாபனங்களில் பிரதிநிதிகளும்,புதிய ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு.டான் கீப் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். கனேடிய அரசுக்கு அனுப்பிய மனுவின் பிரதியொன்றையும் பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டார்.இவ் மனு கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.இவ் ஊர்வலத்தில் 500 இற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.தமிழ் அமைப்புகள்,இலங்கை அரசுகளால் நடாத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் கண்டிக்கப்பட்டன.

# துயர யூலை 83

துயர யூலை 83

1983 ம் ஆண்டு இடம் பெற்ற படுகொலைகளை கண்டித்தும்,அதன் பின்பு இடம்பெற்ற இலங்கை,இந்திய அரச பயங்கரவாதத்தினுல் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூர்ந்தும்,தமிழ் அமைப்புகளின் மோதல்களில் கொல்லப்பட்டவர்களை(உள் படுகொலை உற்பட) நினைவு கூர்ந்தும் பொதுக் கூட்டம் 21.07.1990 இடம்பெற்றது. இக் கூட்டத்தில் மனித உரிமை தாபனங்கள்,சமாதானத்திற்கான அமைப்புகள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.100 இறகும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தை கலை இலக்கிய மன்றமும்,மனித உரிமைகளுக்கான இலங்கையர்கள் அமைப்பும் கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன

www.tamilarangam.net

# தேடகம் நூலகம்

கலை இலக்கிய மன்றம்
566 பாராளுமன்ற வீதி
ரொறன்ரோ

இந்தியா, இலங்கையில் இருந்து புதிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் தருவிக்கப்படுகின்றன.

## தேடகம்
**THEDAGAM**

*5497 A,விக்டோரியா அவனியு*
*அறை இல :222*
*மொன்றியால்*




### முறிந்த பனைமரம்
### (THE BROKEN PLLMYRA)

நான்கு பல்கலைக் கழக ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கும் முறிந்த பனை மரம் என்ற இப்புத்தகமானது யாழ். குடாநாட்டு மக்களின் வேதனையையும், துயரத்தையும் பற்றியது. இப்புத்தகம் தம் சமூகம் அழிந்து கொண்டிருக்கும் வேளையில் வாழ்ந்து கொண்டிருக்கும், தன்னம்பிக்கையும் பிரக்ஞையுமுள்ள சில தனிப்பட்டவர்களால் எழுதப்பட்டது. இப்புத்தகத்தின் நோக்கானது சொல்லப்படாத யாழ்ப்பாண மக்களின் துயர்களை வெளிக்கொணர்வதேயாகும்.

இம்மக்களின் துயர் மிகுந்த கதையானது வலிமை மிகுந்த இந்திய இராணுவத்தால் அடக்கப்பட்டும், இலங்கைப் பிரச்சார இயந்திரத்தால் ஒதுக்கப்பட்டும்,மறைக்கப்பட்டும், தமிழ்ப் போராளிக் குழுக்களால் தங்கள் அரசியல்த் தேவைகளுக்காக பாவிக்கப்பட்டும் வந்தது. உண்மையைப் பேசியதால் இப் புத்தகத்தை எழுதியவர்களில் ஒருவரான திருமதி. ராஜினி திரணகம மிகவும் பெறுமதி வாய்ந்த உயிரை கொடுக்க வேண்டியிருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புனித சம்பத்திரிசியார் கல்லூரி 05-05-96

இன்றும்......

எம் மக்கள்

நம்பிக்கைகளை சுமந்தபடி......

